Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 27 புதன்கிழமை (12.12.2012) பக்கங்கள் 20 ஓசை - 073


விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)













# மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கிறது கூட்டமைப்பு

## "லங்காதீப" பத்திரிகைக்கு அமைச்சர் டக்ளஸ் பேட்டி



(கொழும்பு)

கடந்த முப்பது ஆண்டு கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சமாதானமும் நிம்மதியும் கூடிய வளமான வாழ்வு தேவையாக உள்ளது. இதற்காகத் தமிழர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைச் சீர்குலைக்க முயறசிக்கின்றது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"லங்காதீப" என்ற சிங்கள வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த ஒன்பதாம் திகதி மேற்படி பத்திரிகையில் அமைச்சரின் பேட்டி வெளியாகியிருந்தது. அதன் விபரம் வருமாறு,

*கேள்வி:* 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக அரசாங்கத் தரப்பிலேயே பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படடுள்ளன. இது ஆளுங்கட்சிக்கு பிரச்சினையை ஏற்படுத்தாதா?

*பதில்:* 13 ஆம் யாப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் நிலைப்பாடு. இது ஒரு கூட்டணி அரசாங்கம். பல்வேறு கட்சி உறுப்பினர்கள் இவ்வரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இது ஒரு ஜனநாயக அரசாங்கம் என்பதால் கட்சி உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை முன்வைக்கலாம். 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும் கட்சிகளின் உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். வரவு - செலவுத்திட்ட உரையின் போது ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே எமது நிலைப்பாடும் உள்ளது. மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் 13 ஆவது யாப்புத் திருத்தத்தை பலப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி கருதுகின்றார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கைப் படைகளுக்கு பயிற்சி இந்தியாவில் தொடரும்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

இலங்கையின் ஆயுதப் படையினருக்கு இந்தியாவில் குறுங்கால மற்றும் நீண்ட கால் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படும் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்டனி தெரிவித்துள்ளார். இலங்கை மறறும் பிராந்திய வலயத்தின் அணடை நாடுகளுக்கு இவ்வாறு இநதியா இராணுவப் பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

தொழில் நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாரா பிரிவுகளில் இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைப் படையினருக்கு தொடர்ந்தும் இந்தியா பயிற்சி அளித்து வருகின்றதா என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களான லிங்கம் மற்றும் பிரபோத் பாண்டா ஆகியோர் இந்திய நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத்தில் இன்று சட்டத்தரணிகள் போர்

(யாழ்ப்பாணம்)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கின் சட்டத்தரணிகள் ஒன்று திரண்டு இன்று யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணைக்கு கண்டனம் தெரிவித்து வடபகுதிச் சட்டத்தரணிகள் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பினால் வடபகுதி

19 ஆம் பக்கம் பார்க்க

# விதிகளை மீறும் சாரதிகளின் அனுமதிப் பத்திரம் இரத்தாகும்

## புதிய நடைமுறை ஜனவரி முதல் அமுல்

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக சாரதிகளுக்கு புள்ளி வழங்கி சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யும் முறை அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து பொலிஸாருக்கு இது தொடர்பாக விளக்கமளிககப்பட்டுள்ளதாகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. சாரதிகளின் கவனயீன்மை

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜனவரியில் உயர்தரப் பெறுபேறு

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்து முடிந்த க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகள் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உறுதியளித்துள்ளார்.

# ஆஸி. வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருவார்

அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் விரைவில் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளார். சுற்றுலாத்துறை, இருதரப்பு உறவுகள், வர்த்தக உறவுகள் மற்றும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் குறித்து இந்த விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. வெளிவிவகார அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பொப் கார் தென் ஆசிய

19 ஆம் பக்கம் பார்க்க

# தொழில் திணைக்களத்துடன் வர்த்தகர்கள் பனியுத்தம்

## அடம்பிடிக்கும் வவுனியா வியாபாரிகள்

(வவுனியா)

வவுனியா தொழில் திணைக்களம்" ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடுமாறு பணித்துள்ளது. அவ்வாறெனில பல்தேசியக் கம்பனிகளான சுப்பர் மார்க்கட்டுக்களையும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமென வவுனியா வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொழில் திணைக்கள அதிகாரிகள் வவுனியா நகர்ப்புறத்தில் திறந்திருந்த வர்த்தக நிலையங்களுக்கு சென்று ஞாயிற்றுக்

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய வீடமைப்பு மும்முரம் விசேட நிபுணர்குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்திய உதவியுடனான வீடமைப்புத் திட்டத்தை அடுத்த மூன்று மாதத்தினுள் துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக இந்திய அரசின் நிபுணர்குழு ஒன்று நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க



# சுகாதார வார நலத்திட்டங்கள்

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வுகளில் இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை சுகாதார வைத்திய அதிகார பணிமனை உத்தியோகத்தர்கள் கலந்துரையாடலும் குழு மதிப்பீடும், கண்காணிப்பும் பிற்பகல் 1.00 மணிக்கு உணவு கையாளும் நிலையங்கள் மீள் மதிப்பீடும் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கெற்பேலி அ.த.க. பாடசாலையில் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது. இதில் கண், உடல் எடை, நீரிழிவு, மலேரியா, காசநோய், குருதிச்சோகை போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் காலை 8.00 மணிக்கு டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் ஊழியர் பொதுமக்கள் குறைகேள் அரங்கமும் மீசாலை கிழக்கில் டெங்கு வீட்டுத் தரிசிப்பும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குருதிக்கொடை முகாமும், காலை 9.00 மணிக்கு கச்சாய் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நீரிழிவு மருத்துவ முகாமும் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார மேம்பாட்டுக் கலந்துரையாடலும், பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் யாழ். உத்தியோகத்தர்களது கலாசார நிகழ்வுகளுடன் தேசிய சுகாதார வார நிகழ்வுகள் நிறைவு பெறவுள்ளது.(11)


**மனநல மருத்துவ சேவை**

மனோ வியாதிகளிலிருந்து குணமடைவதற்கான மனோதத்துவ முறையிலான மூலிகைகளைக் கொண்ட சிகிச்சைகளும்,

மனநல பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியாது மன அழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மனநலன் தரும் ஆலோசனைகளும் அனுபவ மிக்க தகுதியான வைத்தியரினால் வழங்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
T.P-0771890270

(R/088)


## ஊர்காவற்றுறை பிரதேசசபை

# 2013 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கும் மீன் சந்தை, மரக்கறிச் சந்தை, மாட்டு இறைச்சிக்கடை..கள், சந்தை உட்புறக் கடைகள் என்பன 01-01-2013 தொடக்கம் 31-12-2013 வரை குத்தகைக்கு வழங்குவதற்கு மீள் கேள்வி கோரப்படுகின்றது.

| இல | குத்தகை விபரம் | மாதாந்த வாடகை (VAT, NBT தவிர) | கேள்விப் பத்திரப் பணம் (VAT, NBT தவிர மீளளிக்கப்படாதது) | கேள்விப் பத்திரப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01 | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை | 600.00 | 500.00 | 5,000.00 | 313,500.00 |
| 02 | ஊர்காவற்றுறை சந்தை உட்புறக்கடை (இல 01,02) | 400.00 | 500.00 | 5,000.00 | 104,500.00 |
| 03 | நாரந்தனை மீன் சந்தை | - | 500.00 | 1,000.00 | 18,050.00 |
| 04 | நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை | 600.00 | 500.00 | 5,000.00 | 209,000.00 |
| 05 | புளியங்கூடல் மீன் சந்தை | - | 500.00 | 1,000.00 | 10,925.00 |
| 06 | புளியங்கூடல் மரக்கறிச்சந்தை | - | 500.00 | 1,000.00 | 10,925.00 |

- O கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - 12-12-2012 தொடக்கம் 19-12-2012 வுரை
- O கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 19-12-2012 நண்பகல் 12.00 மணிவரை
- O கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி 19-12-2012 பி.ப.2..00 மணி
- O கேள்வி சம்பந்தமான நிபந்தனை விபரங்களை 17.11.2012 ஆம் திகதிய தினக்குரல், தினமுரசு பத்திரிகைகளிலும், எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 021 321 2398 இலக்க தொலைபேசி மூலமோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம.ஜெயகாந்தன்,
தவிசாளர்
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
12.12.2012

(C/2216)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள் கேள்வி அறிவித்தல் - 2013

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2013 ஆம் திகதி முதல் 31.12.2013 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்க வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 (VAT, NBT நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 12.12.2012 - 20.12.2012 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 20.12.2012 நண்பகல் 12.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 20.12.2012 பி.ப. 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 20.12.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமூகமளிக்கலாம்.

- □. சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5`x5`) நாள் ஒன்றுக்கு 50.00 பெறலாம். மேலதிகமாக எந்த வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
- □. சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டு
- □. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை மாத வடகை என்பவற்றுக்கு 12% VAT, 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
- □. சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான 8 மாத காலப் பகுதிக்குள் 2013 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
- □. கேள்விப் பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன், அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
- □. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராரிக்கும் உரிமை யாழ். மாநகர சபைக்கே உரியது.
- □. கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

---

### மாநகரசபை யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரம் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10000.00 | 1430800.00 |
| 02 | புங்கன்குளம் சந்தை | | 2000.00 | 11550.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 107082.00 |
| 04 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | 04 | 5000.00 | 187201.53 |
| 05 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 02 | 5000.00 | 293309.10 |
| 06 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 03 | 5000.00 | 309509.10 |
| 07 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 05 | 5000.00 | 284399.10 |
| 08 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 06 | 5000.00 | 80041.50 |
| 09 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 07 | 5000.00 | 80041.50 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 08 | 5000.00 | 80041.50 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 09 | 5000.00 | 80041.50 |
| 12 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 11 | 5000.00 | 56767.50 |
| 13 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 5000.00 | 11550.00 |
| 14 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 02 | 5000.00 | 465750.00 |
| 15 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | | 5000.00 | 89999.91 |

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.12.11

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்.

(C/2217)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

## - யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்தி குழு செயலாளர்

(திருநெல்வேலி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களின் சேவை அளப்பரியது. அவர்களின் தொண்டு மனப்பான்மை போற்றுத்தற்குரியது. இவர்கள் விரைவில் அரச சேவைக்குள் உள்வாங்கப்படல் வேண்டும் என யாழ்.போதனா வைத்திய சாலையின் அபிவிருத்திக்குழு செயலாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்தார்.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் சிறந்த தொண்டர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர்,

யாழ். போதனா வைத்திய சாலையில் தாதிகள் பற்றாக்குறை நிறைந்தளவு காணப்படுகின்றது. 1500 தாதியர்கள் தேவைப்படும் இவ்வைத்திய சாலைக்கு 398 தாதிமார்களே கடமையில் உள்ளார்கள்.

நோயாளர்களை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் தொண்டர்கள் சிறப்பான முறையில் கவனிக்கின்றார்கள். இவர்களின் சேவையை நோயாளர்களும் வரவேற்கின்றார்கள். இத்தொண்டர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் விரைவில் அதிகரிக்கப்படும்.

வைத்தியசாலை விடுதியில் தங்கும் நோயாளர்களுக்கு பாய் வழங்குவது நிறுத்தப்படவுள்ளது. 'ஜேர்ணி பெட்' என அழைக்கப்படும் பிரயாணப் படுக்கைகள் விரைவில் இவர்களுக்கு வழங்கப்படும். தற்போது (லிப்ட்) ஒன்று மட்டுமே இயங்கி வருகின்றது. விரைவில் மற்றைய லிப்ட்டும் வந்து சேர்ந்தவுடன் அதனைப் பயன்படுத்த முடியும்.

தொண்டர்கள் நோயாளிகளிடம் சிரித்துக் கதைக்க வேணடும். அவர்களுடன் அன்பாகப் பேசவேண்டும். நோயாளிகளிடம எரிந்து விழக்கூடாது. தொண்டர்களின் உரையாடல் மூலம் நோயாளியின் பாதி வருத்தம் குணமாகிவிடும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், வேலணைப் பிரதேச சபைத்தவிசாளர் சிவராசா, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன், உதவி ஆணையாளர் ஈழநேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் அதிகளவில் கலந்துகொண்டனர். (137)

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

**உறுப்புரை - 11**

1. தண்டனைக்குரிய தவறுக்கு குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளெனக் காண்பிக்கப்படும் வரை, சுத்தவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

2. தேசிய சர்வதேச சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாகக் கொள்ளப்படாதிருந்த பொழுது புரியப்பட்ட அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்கான குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன் தண்டனைக்குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

# 25 முறைப்பாடுகள் பொலிஸில் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பொலிஸாரினால் விசாரணைக்கென கைது செய்யப்பட்டவர்கள் குறித்து நேற்று முன்தினம் வரை தமது காரியாலயத்திற்கு 25 முறைப்பாடுகள் அவர்களது உறவினர்களால் பதிவு செய்யப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இதில் இறுதியாக கடந்த 5 ஆம் திகதி சுன்னாகத்திலிருந்து ஒரு முறைப்பாடும், கடந்த 9 ஆம் திகதி கோப்பாயிலிருந்து 1 முறைப்பாடும், நேற்றும், நேற்று முன்தினமும் மேலும் 5 முறைப்பாடுகளும் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் குறித்து தமது தலைமை அலுவலகத்திற்கு தாம் தெரியப்படுத்தியிருப்பதாகவும் ரி.கனகராஜ் மேலும் தெரிவித்தார். (பா)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையால் பிரிதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் செஞ்சொற் செம்மல் இரா.கேதீசன் பாடும் பணியே என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

# ஊர்காவற்றுறை நூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் உள்ள பொது நூலகங்கள் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொது நூலகம் நடத்திய போட்டி முடிவுகள் வருமாறு,

**கதை சொல்லல்**

டி.மெரித்றொனி (ஊர்காவற்றுறை ஆண்கள் பாடசாலை), ஜெ.பிறின்ரா (புனித மரியாள் மகளிர் கல்லூரி), பி.கிரிஷாளினி (புனித மரியாள் மகளிர் கல்லூரி),

**பேச்சு**

இ.பவிதாரணி, (புனித மரியாள் மகளிர் கல்லூரி), அ.ஜெனிமரியா, (புனித மரியாள் மகளிர் கல்லூரி), யு.மேரிடயானி, (புனித மரியாள் மகளிர் கல்லூரி).

**சித்திரம்**

உ.தனுசன் (புனித அந்தோனியார் கல்லூரி), சி.திவ்யன் (புனித அந்தோனியார் கல்லூரி), த.மஜித் (புனித அந்தோனியார் கல்லூரி).

**கட்டுரை**

**கீழ்ப்பிரிவு**

ஏ.சாள்ஸ்டிலக்ஷன் (புனித அந்தோனியார் கல்லூரி), மே.அன்ரனி அன்று (புனித அந்தோனியார் கல்லூரி), ம.அன்டிலானி (புனித அந்தோனியார் கல்லூரி).

**மேற்பிரிவு**

இ.கஜாஜினி (புனித அந்தோனியார் கல்லூரி), கி.சுசிலா (புனித அந்தோனியார் கல்லூரி), ச.நிவேன் (புனித அந்தோனியார் கல்லூரி).

**பொது அறிவுப் போட்டி**

ஜெ.சிந்துஜா (புனித அந்தோனியார் கல்லூரி), ம.அனல்ட்சரண்சன் (புனித அந்தோனியார் கல்லூரி), க.சுவேதா (புனித அந்தோனியார் கல்லூரி) கு.ஜோசப் (கொத்திக்குளம் கிழக்கு ஒழுங்கை ஊர்காவற்றுறை.)

(தொடரும்......)

# சுகாதார பணிமனையினால் எயிட்ஸ் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி த.தயாளன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.இரகுநாதன், ஐக்கிய அபிவிருத்தி நிதிய யாழ்.இணைப்பாளர் இரபோஸ், நீரும் சுகாதாரமும் செயற்றிட்ட அலுவலர் தே.யசோதரன், மதபோதகர் அபியூட், தென்மராட்சி போதகர் ஒன்றியத்தலைவர் ஆபிரகாம் சந்திரன், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வாணிபச் சங்கத்தலைவர் லயன வ.ஸ்ரீப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எயிட்ஸ் விழிப்புணர்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (11)

## இலக்கத்தகடு கண்டெடுப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை நகர பேருந்து நிலையப் பகுதியில் பேருந்து நிலையத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரால் மோட்டார் சைக்கிள் வாகனத்தகடு (WC 9318) கண்டு எடுக்கப்பட்டு பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபை சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

## பொதுக் கூட்டம்

(வேலணை)

வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் சங்கத்தின் கேட்போர் கூட பணிமனை கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ.சிவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்தக் கூட்டத்தில் புதிய தலைவரும், நிர்வாகத்திற்கான நெறியாளர் குழுவொன்றும் தெரிவுசெய்யப்படவுள்ளன. (05)



கன்டிகாவ் இன்ரநஷனல் அமைப்பினால் மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் புனர்வாழ்வளிக்கும் சீ.பி.ஆர். நிகழ்ச்சித் திட்ட தொண்டர்களுக்கு கிளிநொச்சி சோலைவனத்தில் அண்மையில் செயலமர்வு நடத்தப்பட்டது. மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் கருத்துரை வழங்குவதையும், தொண்டர்கள் அமர்ந்திருப்பதனையும் காணலாம் (90)

# கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல மருத்துவ ஆய்வுகூட உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மருத்துவ ஆய்வுகூட உரிமையாளர்களும், மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்களும் (MLT) தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## துரோகிகள் பெரும்பான்மையான சமூகம்!

"விடுதலைப்புலிகளுடன் எமக்கு தொடர்பு உள்ளது என எம் மீது தவறான குற்றச்சாட்டுகளும், பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை நான் மறுக்கின்றேன். ஆனால், நீங்களோ (அரசு) எம்மைப் புலிகள் என்றும், எங்களைப் புலிகளின் பிரதிநிதிகள் என்றும் கூறுகின்றீர்கள். இதனை மாற்றிக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் சிங்கள மக்களை மட்டும் கொலை செய்யவில்லை. விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் எனது பெயரும், எனது சகாக்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன."

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியல் என்பது, தமிழ்த் துரோகிகளின் பட்டியல் என்பதாகவே தமிழ் சமூகத்தில் வழங்கப்பட்டது என்பது எல்லோருமறிந்ததே. தாங்களும் ஒருகாலத்துத் துரோகிகளே என்பதையும், விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னரே தமிழ்த் தேசிய வீரர்களாக மாறியவர்கள் என்பதையுமே சம்பந்தன் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலமாக சபையில் தெரிவித்துள்ளார்.

இதற்குமுன்னர் சபையில் மாவீரர்தினம் குறித்து உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன், இந்தப் போராட்டத்தில் உயிர்நீத்தவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமில்லை ரெலோ போராளிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த போராளிகளும் பொதுமக்களும் தங்கள் இன்னுயிரை ஈந்துள்ளனர். அவர்களையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறோம். அந்தத் தியாகிகளாலேயே நாம் இன்று நாடாளுமன்றத்தில் நிற்கிறோம் என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

விடுதலைப் புலிகளினால் துரோகிகளாக அறிவிக்கப்பட்டுக் கொல்லப்பட்டவர்களை, அவர்கள் துரோகிகள் இல்லை அவர்கள் தமிழ் சமூகத்திற்காகத் தமது உயிர்களைத் தந்த தியாகிகளே என்று கூட்டமைப்பைச் சேர்ந்த பெரும்பான்மையோர் தங்கள் மனசாட்சிக் கதவுகளைத் திறப்பதைக் காணமுடிகின்றது. மறுதலையாக தமிழ்த் தேசியத்தின் படுபிற்போக்குத் தீவிரவாதிகளாகத் தங்களைக் காண்பித்துக்கொள்ளும் சிறிதரன், சரவணபவன், குதிரைக் கஜன், கஜேந்திரகுமார், பத்மினி போன்றவர்களிடம் நீங்கள் இன்றும் சொல்லிக் கொண்டிருக்கும் துரோகிகளைச் சரியான கணக்கெடுப்பிற்கு உட்படுத்தினால் அவர்களே தமிழ் சமூகத்தின் அறுதிப் பெரும்பான்மையினர் என்று இடித்துரைப்பதாகவும் இருக்கிறது.

தமிழ் சமூகத்தின் மிகப்பெரும்பான்மையை துரோகிகளாகச் சொல்லிக்கொண்டே அவர்களது வாக்குகளையும் பெற்றுக் கொண்டு இந்தச் சிறுபான்மைத் தமிழ் இனவாதிகள் போடும் உணர்ச்சிகரத் தமிழ்த் தேசியக் கூத்தை கூட்டமைப்புக்குள்ளேயே முன்னாள் துரோகிகளாக சொல்லப்பட்ட மேல்மட்டத்தினர் இப்போது அம்பலப்படுத்தி வருகிறார்கள்.

தலைவர் சம்பந்தன், தமது உரையில் மேலும், "புலிகள் இருந்த காலங்களில் எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குச் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தற்போது, எமது சுதந்திரமான கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலாளருக்கும் புண்ணியம் கிடைக்க வேண்டும். இன்று புலிகளை அழித்துவிட்டோம் என்று யார் யாரோ கூறிக்கொள்கின்றனர். புலிகளை எவரும் அழிக்கவில்லை. அவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர். ஜனநாயகத்தையும், தார்மீகத்தையும், மனித உரிமைகளையும் கடைப்பிடிக்கத் தவறியதாலேயே புலிகள் அழிந்து போனார்கள்.... இலங்கையின் வட பகுதியில் இருந்து இராணுவ முகாம்களை முழுமையாக அகற்றவேண்டும் என்றோ, இராணுவம் வெளியேற வேண்டும் என்றோ, நான் ஒருபோதும் கூறியதில்லை. வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தங்களின் வரையறைக்குள் இருந்து செயற்படவேண்டும் என்றுதான் கூறினேன். தமிழர் பகுதிகளில் அவர்கள் புலனாய்வு செய்யலாம், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால் அவர்கள் எமது மக்களின் வாழ்விற்கு இடையூறாக இருப்பதைத்தான் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார். இராஜவரோதயம் புதல்வருக்கு என்ன ஒரு ஞானோதயம்!

- ஆசிரியர்

# போராட்டங்களை முன்னெடுக்கும் நபர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவர்

## பாதுகாப்புச் செயலாளர்

(கொழும்பு)

புலிகள் அமைப்பு மீண்டும் தலைத்தூக்க ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில் சில இளையோர் அமைப்புகள் மற்றும் புதிய இளைஞர்கள் மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கும் நபர்களை பிடித்து புனர்வாழ்வுக்கு உட்படுத்த பின்நிற்கப்போவதில்லை.

தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்பை மீண்டும் இரகசியமான முறையில் கட்டியெழுப்ப வடக்கில் உள்ள இளைஞர்களை தூண்டும் சில தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் திட்டமிட்ட குழுவினர் தொடர்பாக விசாரணை நடத்துமாறு புலனாய்வுப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம் என்றார்.

இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் உஷாராக இருக்குமாறு வடக்கில் உள்ள பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகளுக்கு பாதுகாப்புச் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

திட்டமிட்ட சிலர் இராணுவம் மற்றும் பொலிஸாரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் இரகசியமான முனைப்புகளை மேற்கொள்ள முயற்சித்து வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சடலங்களைத் தோண்டியெடுத்து அவயவங்கள் கொள்ளை

(கொழும்பு)

இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்களை தோண்டியெடுத்து அதிலிருந்து அவயவங்கள் எடுத்துச் செல்லப்பட்ட சம்பவமொன்று கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை பாண்டிருப்பு இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த பல சடலங்களைத் தோண்டி எடுத்த இனந்தெரியாதோர் அந்தச் சடலங்களிலிருந்து அவயவங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

பாண்டிருப்பு அன்புவெளிபுரம் கடற்கரை வீதியில் உள்ள இந்து மயானத்தின் ஊடாக நேற்றுக் காலை சென்ற பொது மக்கள் புதைகுழிகள் தோண்டப்பட்டிருப்பதை கண்டு அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்தனர். இதனையடுத்து குறித்த மயானத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த சவப்பெட்டிகளில் 4 சவப்பெட்டிகள் தோண்டி எடுக்கப்பட்டு அந்த சவப்பெட்டிகளை உடைத்து அதனுள் இருந்த சடலங்களை வெளியே எடுத்து அவயவங்களை எடுத்து விட்டு சடலத்தை மீண்டும் அரைகுறையாகப் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளைக் கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதான 4 நோய்களைத் தடுக்க உயிரியல் நோய் கட்டுப்பாடு

(கொழும்பு)

உயிரியல் நோய் கட்டுப்பாட்டு முறை மூலம் இலங்கையின் நான்கு பிரதான நோய்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இதற்காக இரண்டு வெளிநாட்டு நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யானைக்கால், குஸ்ட நோய், லிச்சிமோனை சீஸ் மற்றும் கொக்கி புழு ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே இவர்கள் இலங்கை வந்துள்ளனர். இதனிடையே விரைவில் இதற்கான யுக்திகளை குறித்த விசேட நிபுணர்கள் கையாள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.க. செயற்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் 54 ஆவது மாநாடு நிறைவுற்ற பின்னர் இடம்பெறும் முதலாவது செயற்குழுக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய பதவிகளுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கட்சியின் பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர், தவிசாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு நபர்கள் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பதவிகளுக்கு கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உறுப்பினர்களின் பெயர்களை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கூட்டம்

(வேலணை)

யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தின் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் நிலையத் தலைவர் பொ.சிறி ராஜ புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய கூட்டத்தில் முக்கியமாக நிலையத்தின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# பொம்மை வெளியில் குடியேறிய முஸ்லிம்களுக்கு கிடுகுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் புதிதாக மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு கிடுகுகள் விநியோகிக்கப்பட்டன.

கொழும்பில் இயங்கும் அமீர் பௌண்டேஷன் சார்பாக வை.எம்.எம்.ஏ. யின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.ரஹீமின் ஏற்பாட்டில் 40 குடும்பங்களுக்குரிய கிடுகுகள் வழங்கும் நிகழ்வு சென்ற ஞாயிறு மாலை யாழ். பொம்மைவெளியில் நடைபெற்றது.

இந்நிகழ்வு முஹம்மதியா பள்ளி தலைவர் எம்.ஏ.ஸி. மூபின், கல்வியதிகாரி எம்.ஜெலீல் சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர் எம்.நௌஷாத், ஹோப் ஸ்ரீலங்கா உத்தியோகத்தர் எம்.நஸீர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தனிப்பட்ட ஒருவரினால் மையவாடிக்கு கொடுக்கப்பட்ட இக் காணிகளில் தற்காலிகமாக குடிசை அமைத்து வாழ்வதற்காக இத்தகைய உதவிகள் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டன. ஒரு வாரத்தில் தத்தமது குடிசைகளை தாமே சுயமாக நிர்மாணிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் உலமாக்களுடன் யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலை வர் எம்.ஆர்.நிலாம், எம்.எல். லாபிர், எம். சுவர்கான், எம்.வை. எம்.தாஹிர் உட்படப் பல பிரமுகர்களும கலந்துகொண்டனர். (105)

**மக்கள் இப்பொழுது மௌனமாக இருக்கிறார்கள். இந்த மௌன நிலை விரக்தியின் வெளிப்பாடல்ல. பட்டுக்களைத்த ஞான அனுபவம். அனுபவங்கள் ஒருபோதும் இறப்பதில்லை. இந்த இறக்காத அனுபவங்களைப் பெற்றவர்கள், இப்பொழுது சுயமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். யானை ஆண்டால் என்ன? பூனை சிங்காசனத்தில் இருந்தாலென்ன? என்ற மனநிலைக்கு வந்திருக்கும் மக்களுக்கு, இப்பொழுது முதலில் தேவைப்படுவது தமக்கான வாழ்வாதாரத் தேவைகளே. தமது பிள்ளைகளுக்கான கல்வி வளங்களும், தொழில் துறைகளும், அதன் மூலம் முன்னேற்றகரமான ஒரு வாழ்க்கையுமே.**

**வன்னியிலிருந்து... அத்திமுகத்தோன்**

# சிந்திக்க முனையும் மக்கள் சிந்திக்காத தலைமைகள்



“ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு...” போன்று துயரறியா அரசியல்வாதிகள் சிலர், நாட்டில் ஆங்காங்கே தற்செயலாக அன்றி திட்டமிட்டு நடைபெறுகின்ற அசம்பாவித நிலைவரங்களையும், அதனால் மக்களிடையே ஏற்படுகின்ற பதற்றமான சூழ்நிலைகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய வண்ணம், தொடர்ந்தும் தமது ‘இருப்பு அரசியலை’ நடாத்த முனைவதைக் காணக்கூடியதாகவே இருக்கிறது.

கடந்த காலங்களில் நாடு அசாதாரண சூழ்நிலையில் சிக்கியிருக்கும்போது, அதன் மூலம் தமக்கான அரசியலையும், வாழ்க்கையையும் நன்றாக அனுபவித்த இவர்கள், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சாதாரண சூழ்நிலையானது இவர்களைப் பெரும் சங்கடத்திற்கும், மனச்சஞ்சலத்திற்கும் ஆளாக்கியுள்ளது என்பதை,அவர்களது அண்மைக்கால அரசியல் அறிக்கைகளும், அவசரத்தனமான செயற்பாடுகளும், அவர்களின் வார்த்தைப் பிரயோகங்களும் நன்கு துலாம்பாரமாகவே வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

தணிந்து போகும் நெருப்பை தட்டி ஊதிப் பெருக்கவைப்பதன் மூலம், அதன் வெக்கையில் ‘குளிர்காயும் அரசியல்’ நடாத்த முனையும் இந்த அரசியல்வாதிகளுக்கு, தற்போது குண்டு வெடிப்புக்கள்..., துவக்குச் சூடுகள்... ஷெல்லடிகள்... கிபிர்த் தாக்குதல்கள்... தடை முகாம்கள்.... வீதிச் சோதனைச் சாவடிகள்... போன்றவை எதுவுமே அற்று இருப்பதனால், தாங்கள் வரித்துக் கொண்ட ‘தன்மானக் கொள்கையை’ மக்கள்முன் துப்பவும் முடியாமல், தமக்குள்ளே விழுங்கவும் முடியாத ஓர் இக்கட்டான நிலைக்குள் சிக்குப்பட்டு நிற்கின்றார்கள்.

“மக்கள் சிந்திக்காதவரை தமக்கு சிறப்பான வாழ்வு உண்டு...” என்ற சிந்தனாதிக்கத்துக்குள் சிக்கியிருப்பவர்களுக்கு, எங்கே மக்கள் சிந்திக்க வெளிக்கிட்டால், தங்களின் எதிர்கால அரசியல் வாழ்வு சுத்த சூனியமாகப் போய்விடுமோ? என்ற அச்சப் பிரதிபலிப்புகள் அவர்களில் அவ்வப்போது வெளிப்படத்தான் செய்கின்றன.

இருந்தபோதிலும், அதன் பலவீனங்களை வெளியே காட்டிக்கொள்ளாதவர்களாக, முந்தையகால‘வீரவசனங்களோடு’ தங்களுடைய அரசியல் இருப்பை நகர்த்திக்கொண்டிருக்கின்றபோதிலும், சுயமாகச் சிந்திக்கும் மக்களிடம் இவர்களுடைய ‘சரக்கு’ எடுபடுவதில்லை என்பதே வெளிப்படையான விசயமாகும்.

தமிழ்மக்களிடம் இனவாத உணர்வுகள் தணிந்துபோவது தங்களுடைய அரசியல் இருப்புக்கு மிக மோசமான ஆபத்தாக முடியும் என்பதில், இந்த அரசியல்வாதிகள் நன்றாகவே அறிந்தும், உணர்ந்துமிருக்கிறார்கள். அதனால்தான், தமக்குள்ளே எத்தனை குத்து வெட்டுகள், குழிபறிப்புகள், பனிப்போர்கள் என்பன நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போதிலும், வெளியரங்கத்தில் அவர்கள் ‘ஒற்றுமையாக’ மக்கள் மத்தியில் சூடேற்றும் வார்த்தைகளைக் கனன்று கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளினால் தமிழ்மக்களும், அரசாங்கமும் அல்லது இராணுவமும் ஒரு கொதிநிலைக்கு உள்ளாவதன் மூலம், அனைவரும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதும் சமயத்தில், அதை தமது சந்தர்ப்பவாத அரசியலுக்குப் பயன்படுத்தலாம் என்றே நினைக்கின்றார்கள்.

இணக்கப்பாட்டு அரசியல் என்பது இவர்களின் அரசியல் அகராதியில் அறவே கிடையாத ஒரு விசயமாகும். அப்படியானதொரு இணக்கப்பாடு இவர்களுக்கு மத்தியில் எப்பொழுது உதயமாகும் என்றால், தன் நலமும் தன் குடும்பப் பொருளாதார வளம் சார்ந்த தேவையும் ஏற்படும்போதுதான், தமது எதிரிகளுடனான பகைமை உணர்வை மறந்து அல்லது மறைத்து ‘பின் கதவினூடாக’ப் பெற்றுக்கொள்ளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு, உடன்பட்டுப் போகிறார்கள்.

இது தவிர, துன்பியல் வாழ்வில் துவண்டு போயிருக்கும் மக்களுக்கு, அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான பொருளாதார மேம்படுத்தல்களையும், தொழில்துறைகளுக்கான வழிவகைகளையும் ஊக்குவிப்பதற்கு தகுதி அற்ற நிலையில், இன்னமும் அம்மக்களிற்கான தலைமைத்துவதற்கு தாமே உரிமையென உரைத்துக்கொண்டிருப்பது ஒரு தரங்கெட்ட அரசியலின் வெளிப்பாடேயொழிய வேறொன்றில்லை என்பதே ஆகும்.

வடக்கே உள்ள மக்களுக்கு ஒரு முகமும் தெற்கே உள்ள மக்களுக்கு இன்னொரு முகமுமாக ‘இரட்டை வேட அரசியல்’ நடாத்தும் இந்த அரசியல்வாதிகளை, மக்கள் இனங்கண்டு வீட்டிற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ அனுப்பிவைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

கடந்த கால அனத்தங்களினூடாக வாழ்வைத் தொலைத்தவர்களும், வஞ்சிக்கப்பட்டுப் போனவர்களும் இப்பொழுது சுயமாகச் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டார்கள். தங்களின் இல்லாமையை இந்த அரசியல் வாதிகள் தமக்கான அரசியலாக்குவதையும், தங்களது இயலாமையை அவர்கள் ஆதாயமாக்குவதையும், தங்களில் உள்ள ஒரு சிலரின் பலவீனங்களைப் பயன்படுத்தியே அவர்கள் தங்கள் பதவிகளைப் பாதுகாக்க முடிவதையும், தங்களின் பட்டழிந்த வாழ்வே அவர்களின் அரசியல் பரப்புரைக்கு ஏதுவாக அமைகிறது என்பதையும் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். அத்தோடு ‘சிண்டு முடியும்’ செயல்கள் மூலமும் சிங்களவன் எதிரியென அவர்கள் செப்பித்திரிவதன் மூலமும் தங்களுக்கான உரிமை ஒருபோதும் வராதென்பதிலும் மக்கள் தெளிவாகவே இருக்கின்றார்கள்.

தற்கால நிலைமை இவ்வாறாக புதியதொரு மாற்றத்தை நோக்கிப் பயணிக்கும்வேளையில், இனிவரும் காலங்களில் இந்த அரசியல்வாதிகளின் நகர்வுகள் மக்கள்முன் எடுபடுமா? என்பதே அவதானிகள் எழுப்பும் வினாவாகும்.

ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினையானது அகிம்சை வழியில் தோற்று, ஆயுத வழியில் போராடி, அதுவும் முள்ளிவாய்க்காலுடன் முற்றுப்பெற்ற பிற்பாடு, இனி எந்த வழியில் போராடுவது? எமக்கான சரியான தலைமை யார்? என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாக, ‘இணக்க அரசியல்’ மூலம் இழந்ததைப் பெற முடியும் என்று மக்கள் இன்று இறங்கி வந்திருக்கின்றார்கள். இந்நிலையில், தேவையற்ற உசுப்பல் வார்த்தைகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களை இனியும் நடுத்தெருவுக்கு இழுத்து வந்து அரசியல் நடாத்த முடியாது என்பதை சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் இப்பொழுது மௌனமாக இருக்கிறார்கள். இந்த மௌனநிலை விரக்தியின் வெளிப்பாடல்ல. பட்டுக்களைத்த ஞான அனுபவம். அனுபவங்கள் ஒருபோதும் இறப்பதில்லை. இந்த இறக்காத அனுபவங்களைப் பெற்றவர்கள், இப்பொழுது சுயமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். யானை ஆண்டால் என்ன? பூனை சிங்காசனத்தில் இருந்தாலென்ன? என்ற மனநிலைக்கு வந்திருக்கும் மக்களுக்கு, இப்பொழுது முதலில் தேவைப்படுவது தமக்கான வாழ்வாதாரத்தேவைகளே. தமது பிள்ளைகளுக்கான கல்வி வளங்களும், தொழில்துறைகளும், அதன் மூலம் முன்னேற்றகரமான ஒரு வாழ்க்கையுமே.


இதேவேளை, கடந்த கால அரசியல் மூலம் பெற்றுக்கொண்ட ‘கசப்பான அனுபவங்கள்’ காரணமாக, அறுபது வருடங்களுக்கு மேலான தீரா ஒரு பிரச்சினைக்கு இதுவரையிலும் ஒரு தீர்வு கிடைக்காத கிடைக்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிற. ஒரு ‘தலைமையை’ அவர்கள் இனங்கண்டு வருகிறார்கள்.

இந்த இனங்காணுதல் நிமித்தம் -

தமிழ் இனம் சிறுபான்மை இனம்... அடக்கப்பட்டுக்கொண்டிருக்கிற இனம்... பகைவர்களால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இனம்... முடிவல்ல ஆரம்பம்... இனித்தான் தெரியப்போகுது... எனும் வார்த்தைப் பிரயோகங்களைப் பார்த்து மக்கள் தமக்குள்ளே நகைப்பதும், போகவிட்டு காரசாரமான கருத்துக்களைப் பரிமாறுவதும் இந்த அரசியல் வாதிகளுக்கு என்றுமே தெரிவதில்லை.

ஏனெனில், இவர்கள் எப்பொழுதும் நலிவடைந்த மக்கள் மத்தியில் வருவதுமில்லை; சஞ்சரிப்பதுமில்லை; அவர்களைச் சந்திப்பதுமில்லை.

# இலங்கை சுங்க வரி அதிகரிப்பிற்கு ஆட்டோமொபைல் நிறுவனம் கவலை



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான சுங்க வரியை இலங்கை பலமடங்கு அதிகரித்திருப்பது தமக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக இந்திய ஆட்டோமொபைல் நிறுவனம் அறிவித்துள்ளது.

சுங்க வரி அதிகரிப்பு தொழில் துறையில் பாரிய தாக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இதுதொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என இந்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய ஆட்டோமொபைல் துறைக்கு இலங்கை மிகவும் முக்கியமான வாடிக்கையாளர் நாடு ஆகும்.

இந்திய கார் மற்றும் பிற வாகனங்கள் கடந்த ஆண்டு மட்டும் 100 மில்லியன் டொலர் அளவுக்கு இலங்கைக்கு ஏற்றுமதியாகியுள்ளன. அந்த நிலையில், இலங்கையின் திடீர் முடிவு, இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பயணிகள் கார் மீதான சுங்க வரியை 73 சதமும், மூன்று சக்கர வாகனங்கள் மீதான வரியை 45 சதமும் உயர்த்தியது. வர்த்தகப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மீதான வரியும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தொல்பொருள் விசாரணை



(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்ட மனித மண்டையோடு மற்றும் எலும்புக்கூடுகள் குறித்து தொல்பொருள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாத்தளை சட்ட வைத்தியர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் பட்டமளிப்பு நிறுவனத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

கடந்த 23 ஆம் திகதி மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. அதனைத தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 30 இற்கும் அதிகமான மனித எலும்புக்கூடுகள் மற்றும் மண்டையோடுகள் மீட்கப்பட்டன.

# நீதித்துறை சுதந்திரம் பின்னடைவு


## - புத்திஜீவிகளுக்கான மனித உரிமைகள் அமைப்பு கவலை -

நாட்டில் கைதுகள், கடத்தல்கள் மற்றும் கொலைகள், நீதித்துறை சுதந்திரம், ஊடக சுதந்திரம், மீள்குடியேற்றம் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் கவலைகள் உள்ளிட்டவை அதிகரித்துள்ளதுடன் நீதித்துறை சுதந்திரம் கடந்த 10 மாதங்களில் ஒரு பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது என்று புத்திஜீவிகளுக்கான மனித உரிமைகள் (ஐ.எவ்.எச்.ஆர்) அமைப்பு தெரிவித்துள்ளது. சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித உரிமைகள் நிலவரம் சட்டத்தின் ஆட்சி, தனிநபர் சுதந்திரம் ஒரு முன்னோடியில்லாத நிலைமையில் சென்று கொண்டிருக்கின்றது. நீதித்துறை சுதந்திரமானது முதல் 10 மாதங்களில் ஒரு பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் 148 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 408 பாலியல் பலாத்கார சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அவைதொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும் 10 வழக்குகளே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வுக்கு இடமில்லை



இனங்களுக்கு இடையிலான குரோத உணர்வு நீடிக்க இடமளிக்கக் கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது மிகப் பெரிய பாவச் செயலாகும். 30 ஆண்டு கால போரின் பின்னர் இனங்களுக்கு இடையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்களின் மனங்களிலிருந்து குரோத உணர்வுகளை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எங்களது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். வேறு வெளிநாட்டு சக்திகளினால் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது. நாட்டின் சட்டம் ஒழுங்கு அனைவரும் சமமானதாக இருக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற இந்து ஆலய மேம்பாட்டுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

# துருப்பிடித்துப் போன பொது நிர்வாக சேவை

(கொழும்பு)

நாட்டின் பொது நிர்வாக சேவை துருப்பிடித்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். நீர்ப்பாசன அமைச்சின் பொறியியலாளர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு அநீதிகளை இழைத்து வருகின்றது. நாட்டின் பொதுத்துறை சேவையில் மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி கடும் முயற்சி எடுத்து வருகின்றார்.

எனினும், சில அதிகாரிகளின் மெத்தனப் போக்கினால் பொது நிர்வாக சேவை சீர்குலைந்துள்ளது. அழுத்தங்களைப் பிரயோகித்தேனும் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற் றுவதே பொதுநிர்வாக அமைச்சின் கடமையாக இருக்க வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்திற்கு பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அவரவர் அமைச்சுக்களில் காணப்படும் துருப்பிடிப்புக்களை கவனித்துக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

# உயர் நீதி மன்றத்தில் 3 மனுக்கள் தாக்கல்



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை இடைநிறுத்தும் வகையில் ரீட் கட்டளை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களுக்கு எதிராக மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தெரிவுக்குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளமையினால் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை இடைநிறுத்தும் வகையில் ரீட் கட்டளையை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த ரீட் மனுக்களை வலுவிலக்க செய்வதற்கான கட்டளையை பிறப்பிக்குமாறு கோரியே அரசாங்கத்திற்கு சார்பான மூவர், உயர் நீதி மன்றத்தில் மூன்று மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். ரீட் மனுக்களை வலுவிலக்கச் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு உத்தரவிடுமாறு கோரியே உயர்நீதிமன்றத்தில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சோசலி முற்போக்கு முன்னணியின் தலைவர் பீட்டர் நெல்சன், மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி டபிள்யூ விஜேரத்ன, அரச சேவை தொழிற்சங்க தலைவர் பியதாஸ ஆகிய மூவருமே ரீட் மனுக்களுக்கு எதிரான மனுக்களை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளனர்.

# கொழும்பு வாழ் சிங்கள மக்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

கொழும்பு வாழ் சிங்கள மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு கொழும்பில் 50 வீதமான சிங்கள மக்கள் வாழ்ந்து வந்தனர்.

எனினும், 2012 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 24 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. தமிழ் மக்களின் எண்ணிக்கை 24 வீதமாகவும், முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 40 வீதமாகவும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1971 ஆம் ஆண்டில் கொழும்பு வாழ் முஸ்லிம் மக்களின் சனத்தொகை 19 வீதமாகக் காணப்பட்டதுடன், தமிழ் மக்களின் சனத்தொகை 24.5 வீதமாக காணப்பட்டது. இந்த எண்ணிக்கை முறையே 40 மற்றும் 33 வீதங்களாக உயர்வடைந்துள்ளன. 2012 ஆம் ஆண்டில் 79468 சிங்களவர்களும், 106325 தமிழர்களும், 126345 முஸ்லிம்களும் வாழ்ந்து வருவதாக புதிய புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குற்றவியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர்

போதிய ஆதாரங்கள் இன்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் அப்பாவிகளை விடுவிக்க வழி செய்யும் வகையில் குற்றவியல் சட்டம் திருத்தப்படல் வேண்டும் என மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் “எனது குரலுக்கு பெறுமதி உண்டு” எனும் தொனிப்பொருளிலேயே இம்மாநாடு நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொலிஸாரின் கோரிக்கைக்காக சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கும் வழக்கத்தை நீதவான்கள் சிலர் கொண்டிருக்கின்றனர்இதனால் அப்பாவி மக்களும் அவசியமின்றி சிறையில் இருக்கவேண்டியுள்ளது. விளக்க மறியல் கைதிகளை பெருமளவில் வைத்திருப்பதால் அரசாங்கத்திற்கு பெரும் செலவு ஏற்படுகின்றது. இந்தக் காரணங்களால் பிணை வழங்குதல் தொடர்பாக குற்றவியல் சட்டங்களை திருத்தவேண்டியுள்ளது என்றார். இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ, நிறைவேற்றமுடியாத பிணை நிபந்தனைகளை நீதிபதிகள் விதிக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

# சிரியாவில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்க ஏற்பாடு

(கொழும்பு)

சிரியாவில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.சிரியத் தலைநகர் டமஸ்கஸில் 20 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் சிக்கியுள்ளனர். கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரமடைந்துள்ள காரணத்தினால் பிரதான விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இலங்கையர்கள் தொடர்பில் கடமையாற்ற வேண்டிய சிரியாவிற்கான இலங்கை கொன்சோல் அதிகாரியைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.தலைநகரில் சிக்கியுள்ள இலங்கையர்களை பாதுகாப்பான முறையில் மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# தொற்று நோய் அற்ற சமூகத்தை விழிப்புணர்வூடாக உருவாக்கவேண்டும்



(யாழ்ப்பாணம்)

விழிப்புணர்வின் மூலம் தொற்றுநோய் அற்ற சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற முன்வர வேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசியசுகாதார வார நிகழ்வுகள் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெற்றபோதே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நோயற்ற சமுதாயத்தினை உருவாக்குவதற்கு சுகாதாரத்துறையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியானதொன்று.

மக்கள் மத்தியில் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இவ்வாரம் கடைப்பிடிக்கப்படுகின்ற போதும், தொடர்ச்சியாக விழிப்புணர்வு செயற்பாடுகள், சுகாதார நடைமுறைகள் சீராக பின்பற்றப்படுகின்ற போதே தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய் அல்லாத நோய்களிலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியுமென அவர் இதன்போது தெரிவித்தார்.

தொடர்ந்து வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட ஏனைய அதிதிகளின் கருத்துரைகள் இடம்பெற்றதுடன், பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானந்தராஜா, யாழ்.பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெவ்ரி உட்பட வைத்திய அதிகாரிகள், சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



**யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மாணவர்களுக்கான விடுகை நிகழ்வில், பாடநூலை சிறப்பாக பேணிய மாணவிக்கு பிரதி அதிபர் சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (105)**

# கைதடி முதியோர் இல்லத்தில் கௌரவிக்கும் நிகழ்வு

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இறைய தினம் புதனகிழமை பிறந்த 60 வயதை அடைந்த முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில், விருந்தினர்களாக கைதடி லயன்ஸ் கழக தலைவர் லயன் இ.குழந்தைவேலு, கொடிகாமம் மக்கள் வங்கி தலைவர் க.சிறிதரன், கைதடி இலங்கை வங்கி தலைவர் செல்வி ந.சுமங்கலா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை இல்ல முகாமைத்துவ உதவியாளர் கெ.ஆரூரன் நிகழ்த்த உள்ளார். இத்தினத்தில பிறந்த 12 பேர் விழா நாயகர்களாக கௌரவிக்கப்பட உள்ளனர்.

போட்டிகளில் பங்கேற்ற வெற்றியாளர்களும் கௌரவிக்கப்பட உள்ளனர். கைதடி வளர்மதி, சரஸ்வதி ஆகிய முனபள்ளி மாணவர்களின் மழலை நடன நிகழ்வும் நடைபெவுள்ளது.

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் நாடகமும், கைதடி விழிப்புலனற்றோர் சங்க தொழிற் பூங்காவினர் வழங்கும் சாகித்தியன் இசைக் குழுவினரின் இசை நிகழ்வும் நடைபெற உள்ளன.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான க.பிரபாவின் நன்றியுரையும் இறுதியாக இடம்பெறவுள்ளது. (90)

# விசர்நாய் கடிக்கு இலக்காகி சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விசர்நாய் கடிக்கு இலக்காகிய சிறுவன் ஒருவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்திருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தொற்று நோய்த் தடுப்புப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த மூன்றரை வயதுடைய கே. கஜேந்திரன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்திருப்பதாக அவ்அதிகாரி தெரிவித்தார்.

இவனது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்தச் சிறுவனை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாகவே விசர்நாய் கடித்திருந்ததாகவும், அதன் பின்னர் அவருக்கு கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)




(படப்பிடிப்பு : சுரேஸ்)

வடமாகாண பாடசாலை வீரர்களுக்கான றக்பி பயிற்சி முகாம் நிறைவு நாள் இன்றாகும். கடந்த இரண்டு நாட்களாக சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்று வரும் றக்பி பயிற்சி முகாமில் இலங்கை றக்பி அணியின் உதவிப் பயிற்றுநர், றக்பி குறித்து நுணுக்கங்களை கற்றுக்கொடுத்து வருகின்றது. இதேவேளை, இன்றைய இறுதி நாளின்போது றக்பி சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இன்றைய தினம் பிற்பகல் 1.00 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 2.00 மணிக்கு கைப்பந்து சங்கமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன. துறைசாரந்தோரை இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நான்காவது ஆட்டம் நாளை ஆரம்பம்

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும், இறுதியுமான ஆட்டம் நாளைய தினம் நாக்பூரில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே, நிறைவடைந்த மூன்று போட்டிகளில் இரண்டில் வெற்றிபெற்று இங்கிலாந்து தொடரில் முன்னிலை வகிக்கின்றது. இப்போட்டி சமப்படுத்தி தொடரை வெல்லும் முனைப்புடன் இங்கிலாந்து அணி களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டியில் வென்று தொடரை சமபடுத்திக் கொள்ளும் முனைப்புடன் இந்திய அணி களமிறங்கும் என நம்பப்படுகின்றது. அந்த வகையில் இப்போட்டி பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் அமையும் என கிரிக்கெட் விமர்சகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



# ஒரு நாளில் நீக்கம்

இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அப்ரிடி, அப்துல் ரசாக் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். இம்மாத இறுதியில் இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி 2 ருவென்ரி–20, 3 ஒருநாள் போட்டிகளில் பங்குபெறவுள்ளன. இதில் முதலாவது போட்டி டிசம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் அணி தங்களது குழாமை அறிவித்துள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான குழாமிலிருந்து பாகிஸ்தானின் சகலதுறை வீரரும், முன்னாள் தலைவருமான அப்ரிடி, சொய்ப் மலிக், அப்துல் ரசாக் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். இதில் சொய்ப் மலிக், அப்ரிடி ஆகியோர் ருவென்ரி–20 அணியில் இடம்பிடித்துள்ளனர்.

ஒருநாள் போட்டி: மிஸ்பா உல் ஹக், நசீம் ஜம்ஷெத், மொஹமட் ஹபீஸ், அசார் அலி, யுனிஸ் கான், ஹரிஸ் சொஹைல், கம்ரன் அக்மல், சயீட் அஜ்மல், வகாப் றியாஸ், ஜுனைட் கான், உமர் குல், இம்ரான் பர்ஹத், உமர் அக்மல், அன்வர் அலி, ஷல்பர் பாபர்.

ருவென்ரி–20 போட்டி: மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், கம்ரன் அக்மல், உமர் அக்மல், உமர் அமின், சொய்ப் மலிக், அப்ரிடி, சயீட் அஜ்மல், மொஹமட் இர்பான், ஜுனைட் கான், சொஹைல் தன்வீர், உமர் குல், அசத் அலி, ஷல்பர் பாபர், அஹமட் ஷெஷாத்.

# இலங்கையின் பந்துவீச்சு வியூகம் ஹேரத்தை சார்ந்திருக்காது



(சிட்னி)

இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசைக்கு ரங்கண ஹேரத் மிக முக்கியமானவராக உள்ளார். இருப்பினும் அவரை மாத்திரம் நம்பி இலங்கை அணியின் பந்துவீச்சு வியூகங்கள் இல்லை என என இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும். இலங்கை அணியின் பந்துவீச்சு எந்தவொரு தனி நபரையும் முழுமையாகச் சார்ந்திருக்காது. ரங்கன ஹேரத் இவ்வாண்டில் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்தார். அவர் இலங்கை அணியின் பந்துவீச்சில் முக்கியமானவராகக் காணப்படுகிறார்.எனினும் அவரைத் தாண்டி இலங்கை அணியின் ஏனைய பந்துவீச்சாளர்களும் இணைந்து செயற்பட வேண்டியிருக்கும். இலங்கை அணியின் பந்துவீச்சுத் திட்டங்கள் தனியான ஒரு பந்துவீச்சாளரை மையப்படுத்தியிருக்காது. பந்துவீச்சுத் திட்டங்கள் அனைத்தும் ஏனைய எல்லோரையும் மையப்படுத்தியே உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ரங்கண ஹேரத் இவ்வாண்டில் 55 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கேள்வியானது வீரர்களின் தரம், திறமை

(பெங்களூர்)

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் திறமை, தரம் கேள்விக்குறியாகிவிட்டது என இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துளளார்.

இங்கிலாந்து அணியுடன் நடந்து வரும் டெஸ்ட் தொடரில், இந்திய அணி 1,2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது. சொந்த மண்ணில் நடக்கும் போட்டிகளில், இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாட முடியாமல் தடுமாறுவது கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. ஐ.பி.எல். போட்டியில் விளையாடி ஏராளமாக சம்பாதிப்பதால்தான் இந்திய வீரர்கள் அலட்சியமாக விளையாடுகிறார்கள் என்று இரசிகர்கள் குறை கூறுவது ஒரு பக்கம் இருந்தாலும், தற்போதையை டெஸ்ட் தொடரில் அவர்களின் செயற்பாடு மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இந்திய வீரர்களின் திறமை, தரம், அர்ப்பணிப்பு கேள்விக்குறியாகிவிட்டது.

அணியின் தோல்வியை விட, தோற்கும் விதம்தான் இரசிகர்களை ஆத்திரப்பட வைக்கிறது. கடுமையாக போராடி தோற்றால் யாரும் குறை கூற மாட்டார்கள். எதிர்ப்பே இல்லாமல் சரணடைவதுதான் விமர்சனத்துக்கு காரணம். மூன்று முறை டாசில் வென்றும் அதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டார்கள். மும்பை ஆடுகளம் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக இருந்தும் இந்திய வீரர்களால் சாதிக்க முடியவில்லை. அதே போல, ஓட்டக் குவிப்புக்கு சாதகமான கொல்கத்தா மைதானத்திலும் துடுப்பாட்டத்தில் சொதப்பிவிட்டார்கள். இளம் வீரர்களை டெஸ்ட் போட்டிக்கு தயார் செய்வது அவசியம். இதற்கு ஏ அணி வீரர்களை அடிக்கடி வெளிநாடுகளுக்கு அனுப்பி விளையாட வைக்க வேண்டும். அது போன்ற தொடர்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்தால்தான், இளம் வீரர்கள் டெஸ்ட் போட்டியின் நெருக்கடிக்கு ஈடு கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மொகீந்தர் அமர்நாத் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஒரு ஆண்டுகளாக டோனியின் ஆட்டம் சிறப்பாக இல்லை. மோசமாகவே விளையாடி வருகிறார். அவர் அணியில் எப்படி இடம் பெற்று இருக்கிறார் என்றே தெரியவில்லை. அவரது ஆட்டத்திறனை பார்க்கும்போது அவர் அணிக்கு தகுதியானவராக இல்லை. இதனால் தேர்வு குழுவினர் டோனியை நீக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# வென்றது மேற்கிந்தியத்தீவுகள்



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ருவென்ரி–20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒரே ஒரு ருவென்ரி–20 போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, சாமுவேல்ஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. 43 பந்துகளை எதிர்கொண்ட சாமுவேல்ஸ் ஒன்பது சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்லாக 85 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பிராவோ 41, டுவைன் ஸ்மித் 24 ஓட்டங்களைப் பெற்றனர். ருபெல் உசைன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 198 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, தமிம் இக்பால், முகமதுல்லா ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இறுதிவரை போராடியது. இருப்பினும் 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இறுதியில் பங்களாதேஷ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் தமிம் இக்பால் 88,'முகமதுல்லா 64 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக சாமுவேல்ஸ் தெரிவானார்.

# வென்றது புல்ஹாம் அணி

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் புல்ஹாம் அணி வெற்றிபெற்றது. இப்போட்டி நியூகாசில் யுனைட்டட் அணிக்கும், புல்ஹாம் அணிக்குமிடையில் இடம்பெற்றது.

இப்போட்டியின் 19ஆவது நிமிடத்திலேயே புல்ஹாம் அணி முதலாவது கோலைப் பெற்று போட்டியில் முன்னிலையைப் பெற்றுக் கொண்டது. ஃபுல்ஹாம் அணி சார்பாக ஸ்டீவ் சிட்வெல் அந்த கோலைப் பெற்று ஆரம்பகட்ட முன்னிலையை வழங்கினார். போட்டியின் முதற்பாதியில் மேலதிக கோல்கள் பெறப்படாது விடப்பட, ஃபுல்ஹாம் அணி 1–0 என்ற கணக்கில் முதற்பாதியில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆரம்பித்து சிறிது நேரத்தில் ஹற்றம் பென் ஆர்ஃபா கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார்.54ஆவது நிமிடத்தில்பெற்றுக் கொள்ளப்பட அந்த கோலின் உதவியுடன் நியூகாசில் யுனைட்டட் அணி கோல் எண்ணிக்கையை 1–1 என்ற கணக்கில் சமப்படுத்தியது. ஆனால், போட்டியின் 63ஆவது நிமிடத்தில் ஃபுல்ஹாம் அணி கோலொன்றைப் பெற்று திரும்பவும் முன்னிலையைப் பெற்றுக் கொண்டதோடு, பின்னர் போட்டியில் வெற்றி பெறவும் அந்த கோல் உதவியது. அந்த கோலைஃபுல்ஹாம் அணி சார்பாக ஹியூகோ ரொடாலெகா பெற்றுக் கொடுத்திருந்தார்.

# பாகிஸ்தான் அணி இந்தியா செல்லக்கூடாது



(கராச்சி)

பாகிஸ்தான் அணி இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளக்கூடாது என பாகிஸ்தானைச் சேர்ந்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் இஷான் மணி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்தமை தவறு எனத் தான் கருதுவதாகத் தெரிவித்த இஷான் மணி, இது ஓர் அரசியல் முடிவு என்றால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அரசியல்வாதிகளுடன் கலந்து பேசி இந்திய அணி பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என்ற உத்தரவாதத்தைப் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.


பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய இந்திய அணியால் முடியாதுவிடின் நடுநிலையான இடமொன்றிலாவது கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற இந்திய அணியைச் சம்மதம் செய்ய வைத்திருக்க வேண்டுமென இஷான் மணி மேலும் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவராக 2003ஆம் ஆண்டு பதவியேற்ற இஷான் மணி, ஏற்கனவே இந்திய அணி பாகிஸ்தானில் போட்டிகளில் பங்குபற்றவிருந்த 2 தொடர்கள் இரத்துச் செய்யப்பட்ட நிலையில், என்ன ரீதியில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இத்தொடருக்குச் சம்மதம் தெரிவித்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

தனது கருத்தின் படி பாகிஸ்தான் அணி இந்தியாவிற்கு கிரிக்கெட் பயணத்திற்குச் செல்லக்கூடாது எனத் தெரிவித்த அவர், மும்பைத் தாக்குதலின் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட்டை சர்வதேசக் கிரிக்கெட் சபையில் ஒதுக்குவதற்கு இந்தியாவும், இந்தியக் கிரிக்கெட் சபையும் முயற்சி செய்தன எனவும் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு இம்மாத இறுதியில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி இந்தியாவில் வைத்து 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 2 ருவென்ரி-20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கையின் இடையூறு போராடித் தோற்றது யாழ். இந்து



(பாணாந்துறை)

இயற்கையின் இடையூறுகாரணமாக பாணாந்துறை டி அல் ஷரிர கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி போராடித் தோல்வியைத் தழுவியது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி பாணாந்துறை டி அல் ஷரிர கல்லூரி மைதானத்தில் கடந்த ஆறாம் திகதி இடம்பெற்றது.

மழை காரணமாக 40 ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக இப்போட்டி இடம்பெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாணாந்துறை டி அல் ஷரிர கல்லூரி அணி 34.15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கே. விஜயசிங்க 28, விக்ரம [illegible]னி 16, பெர்னாண்டோ 63 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுசன், குகனன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 165 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி 20.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிய வெளிச்சமின்றமை காணைமாக போட்டி நிறுத்தப்பட்டதுடன் பரமுல விதிப்படி வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதன்படி மூன்று ஓட்டங்களால் பாணாந்துறை டி அல் ஷரிர கல்லூரி அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் சிவஜெனன் 55, மதுசன் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெர்னாண்டோ இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இயற்கையின் குறுக்கீட்டாலும், பரமுலா விதியின் காரணமாகவும் யாழ். இந்துக் கல்லூரியின் வெற்றிவாய்ப்பு பறிபோனமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக குகனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மதுசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எஸ்.பி.)

# கிண்ணம் வென்றது மட்டுவில் ஐங்கரன்



(மட்டுவில்)

தென்மராட்சியில் அமைந்துள்ள 52ஆவது படைப் பிரிவினரால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணி சம்பியனானது.

52ஆவது படைப் பிரிவினரால் தென்மராட்சி ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 10இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றின. இதன் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் சீமா அணியும் பங்குபற்றின.

சீரற்ற காலநிலை காரணமாக இறுதிப் போட்டி சில வாரங்களால் இடம்பெறாமல் இருந்தது. இந்நிலையில், இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 9ஆம் திகதி காலை 9.00 மணிக்கு உசன் இராமநாதன் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

மூன்று செட்களைக் கொண்ட இத்தொடரில் மட்டுவில் ஐங்கரன் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறந்த வீரராக வினோதன், சிறந்து பந்துப் பரிமாற்று வீரராக நந்தகோபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் போட்டித் தொடரில் பங்குகொண்ட அணிக்கு பந்தும், கரப்பந்து வலையும் வழங்கப்பட்டன.

முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட 52ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

இப்போட்டி நிகழ்வின் கரப்பந்தாட்ட இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், கிராமப் பெரியோர், இரு அணி ஆதாரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

(118)

# இறுதிப் போட்டியில்

## சென். நீக்கிலஸ், ஞானமுருகன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் நடத்திய அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஞானமுருகன் மற்றும் சென். நீக்கிலஸ் அணிகள் தகுதிபெற்றுள்ளது.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியினை பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவருகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறு[illegible] போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக [illegible]ணியினை எதிர்த்து பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டத்தின் தொடக்கத்தில் ஞானமுருகன் அணி அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இருப்பினும் பாடுமீன் அணியும் 2 கோல்களைப் போட்டது. மீண்டும் ஞானமுருகன் அணி 2 கோல்களைப் போட்டு 5 : 2 என்ற கோல் கணக்கில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் குழப்பங்கள் நிறைந்ததாக காணப்பட்டது. இதனால் பாடுமீன் அணிக்கு இரண்டு பெனால்டி வாய்ப்புக்கள் கிடைத்தன. இரண்டு வாய்ப்புக்களையும் சாதகமாக்கிய பாடுமீன் அணி இரண்டு கோல்களை அடித்தது. ஆட்டம் முடியும்வரை இரு அணிகளும் மேலதிக கோல்கள் போடவில்லை.

இறுதியில் ஞானமுருகன் அணி 5 : 4 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இப்போட்டியில் 7 மஞ்சள் அட்டைகளும் ஒரு சிவப்பு அட்டையும் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது.

போட்டி ஆரம்பித்து 5ஆவது நிமிடத்தில் நாவாந்துறை வீரர் றெக்ஸ்மன் முதலாவது கோலினைப் போட்டார். முதல் பாதி ஆட்டம் வரையும் அக்கோல் நீடிக்க 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.


இரண்டாவது பாதி ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் நாவாந்துறை வீரர் எஸ்.அஜந்தன் ஒரு கோல் போட்டு அணியினை முன்னிலைப்படுத்தினார்.

பதிலுக்கு 52ஆவது நிமிடத்தில் யூனியன் வீரர் டேவிட் ஒருகோல் போட்டார். ஆட்டத்தின் இறுதி நேரத்தில் சென். நீக்கிலஸ் அணிக்கு பெனால்டி வாய்ப்பும் கிடைத்தது. அதனை சரியாகப் பயன்படுத்திய அவ்வணி ஒரு கோல் அடித்து வெற்றியினை உறுதி செய்தது. இறுதியில் சென். நீக்கிலஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

விளையாட்டு செய்திகள்

# மாற்றுவலுவுடையோருக்கு சிறப்பு விளையாட்டு நிகழ்வு





(வவுனியா)

வலது குறைவுடைய நபர்களுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு சிறப்பு விளையாட்டு நிகழ்வுகள் செட்டிக்குளம் பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றிருந்தது. வவுனியா ஹன்டிகப் இன்ரநெஷனல் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரதேச சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான CEFCO நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன. 150 சிறுவர்கள் உட்பட 200இற்கும் மேற்பட்ட வலது குறைவுடைய மற்றும் வலது குறைவற்ற சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர். ஹன்டிகப் இன்ரநெஷனல் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர்களை மகிழ்வூட்டும் வகையில் சிறுவர்களுக்கான குதியாட்ட பலூன், முக வர்ண பூச்சுக்கள் மற்றும் பல விளையாட்டு உபகரணங்கள் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டு முதன்முறையாக வவுனியாவில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இதில் பங்கு கொண்டிருந்தனர். அத்துடன் சிறுவர் கழகங்களுக்கு இடையிலான எறிபந்து(Throwball) மற்றும் Boc உயை விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளும் நடைபெற்றன. ஹன்டிகப் இன்ரநெஷனல் நிறுவனத்தின் அனைவருக்கும் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இவ்வகையான புதிய விளையாட்டுக்கள் குறிப்பாக வலது குறைவுடைய நபர்களுக்கு ஏற்றவாறான விளையாட்டுக்கள் வவுனியாவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கனகராயன்குளம் ம.வி. மாணவர்களின் யோகா பயிற்சிக் காட்சியும், ஏரோபிக்ஸ் (Aerobics) உடற்பயிற்சிக் காட்சியும் நடைபெற்றிருந்ததுடன் இதில் வலது குறைவுடைய மாணவர்களும் பற்கேற்று தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தமை சிறப்பம்சமாகும்.

புதிய விளையாட்டுச் செயற்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டு வலது குறைவுடையவர்களையும் உள்வாங்கி நடத்தப்பட்ட இந்த விழாவில் சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கலந்து கொண்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரதேச செயலாளர் நா. கமலதாசன் தனது உரையில், வலது குறைவுடையவர்களையும் சமூகத்தில் சமமாக உள்வாங்கி நடாத்தப்படும் இவ்வகையான நிகழ்வுகள் பாராட்டத்தக்கது என்றும் விளையாட்டின் மூலம் சமூகத்தில் அனைவரையும் ஒன்றிணைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார். ஹன்டிகப் இன்ரநெஷனல் நிறுவனத்தின் அனைவருக்கும் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திட்ட முகாமையாளர் ஸ்ரீவ் ஹாக்னெற் உரையாற்றுகையில் அனைத்து விளையாட்டுக் கழகங்களும், விளையாட்டு நிறுவனங்களும் சமூக மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரையிலும் வலது குறைவுடையோரை விளையாட்டில் உள்வாங்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் வலது குறைவுடையோருக்கான கரப்பந்து விளையாட்டில் சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்ட கிளிநொச்சியைச் சேர்ந்த இரு வீராங்கனைகள் நிகழ்வில் கௌரவிக்கப் பட்டமையையும் குறிப்பிட்டுக் காட்டினார்.

வெங்கலசெட்டிக்குளத்தில் நடைபெற்ற இந்நிகழ்வானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் நடைபெற்றது என்பதுடன், ஹன்டிகப் இன்ரநெஷனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வட இலங்கையில் நடைபெற்ற மூன்று நிகழ்வுகளில் ஒன்றாகும். இது போன்று வவுனியா நகரத்திலும், கிளிநொச்சியிலும் வெவ்வேறு நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(12)

# ரஜினி இனி என்ன செய்ய வேண்டும்?

- ஞாநி -

நல்ல சினிமாவின் தேவை நல்ல நடிகர்கள். ஆனால் வணிக சினிமாவின் தேவை நடிகர் அல்ல, ஸ்டாராக தன்னை உருமாற்றிக் கொள்ளக்கூடிய நடிகர்தான் அதற்குத் தேவை. அப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் வணிக சினிமா திறமையான



சில நடிகர்களை ஸ்டார்களாக உருமாற்றம் செய்யும். அப்படி எம்.ஜி.ஆருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட சூப்பர் ஸ்டார்தான் ரஜினி.

எம்.ஜி.ஆர் கடைசியாக நடித்திருந்த படம் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன். எம்.ஜி.ஆரின் இரசிகர்களே விரும்பாத அவருடைய சில படங்களில் ஒன்றாகவே மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் இருக்கிறது. காரணம் அவருடைய முதுமை கடைசிப் படங்களில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகப் பளிச்சென்று தெரிய ஆரம்பித்து விட்டதுதான்.

இதே சிக்கலை பாபா படத்தில் ரஜினியும் சந்தித்தார். ரஜினியின் அசல் வயதை அவர் பொது மேடைகளில் ஒருபோதும் மறைக்காதவர் என்றாலும், சினிமா பாத்திரங்களில் இளமைத் துடிப்போடே இருக்கும் ஹீரோவாகவே தொடர்ந்து நீடிக்க அவரும் அவர் மீது பணம் கட்டி சூதாடும் பட முதலாளிகளும் விரும்பிவந்திருக்கிறார்கள். ஆனால் பாபாவில் அவரை எவ்வளவு கஷ்டப்பட்டும் இளமைத்துடிப்புள்ள முகமாகக் காட்டமுடியவில்லை. வறட்டுத்தனமான கதையின் சிக்கலும் சேர்ந்து படத்தை தோல்விப் படமாக்கிவிட்டன.

அதிலிருந்து அவரால் "சந்திரமுகி"யில் ஓரளவு மீள முடிந்ததற்குக் காரணம் கதையம்சமும் மேக்கப்பில் காட்டிய கூடுதல் அக்கறையும்தான்.

ஆனால் உண்மையிலேயே அவரை எம்.ஜி.ஆர் நிலையை அடையவிடாமல் தடுத்தது அடுத்து வந்த ஷங்கரின் சிவாஜியேயாகும். எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்திராத கம்ப்யூட்டர் கிரா∴பிக்சும் டிஜிட்டல் இன்ரமீடியட்டும் அவற்றைப் பயன்படுத்துவதில் இருந்த ஷங்கரின் புத்திசாலித்தனமும் இப்போது ரஜினிக்கு கை கொடுத்தன. தொழில்நுட்ப உச்சத்தின் பயன் எந்திரன் படத்தில் ரஜினிக்குக் கிட்டியது. கணிசமான காட்சிகளில் ரஜினியே நடிக்கத் தேவையில்லாமல் ரஜினி நடித்த மாயையை தொழில் நுட்பம் ஏற்படுத்தித் தந்தது.

இனி அடுத்தது என்ன? வணிக சினிமாவின் தயாரிப்பாளர்கள், பெரும் பணம் முதலீடு செய்து அதை விடப் பல மடங்கு பெரும் பணத்தை இலாபமாக ஈட்டும் பேராசையில் இருக்கும் முதலீட்டாளர்கள் போன்றோர் ரஜினியைக் கொண்டு இன்னொரு சிவாஜி, இன்னொரு எந்திரன் தயார் செய்ய முடியுமா என்ற கனவில் நிச்சயம் இருப்பார்கள். ஆனால் அதெல்லாம் அவர்களுடைய கனவு. ரஜினியின் கனவாக அதுவே இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவுமில்லை.

இனி ரஜினி என்ன செய்ய வேண்டும்? அவரால் என்ன செய்ய முடியும் என்பதை முதலில் பார்ப்போம். உடல் நலம் குன்றி சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தபின்னர், ரஜினி தொடர்பாக அறிவிக்கப்பட்ட எந்தப் பட வேலையும் வேகமாக முடிந்து படம் வெளியிடத் தயார் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. முதுமையும் தாக்கிச் சென்ற நோயின் தன்மையும் நிச்சயம் பழையபடி துடிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கவிடாமல் அவரைத் தடுக்கும் சாத்தியங்களே அதிகம். திரும்பவும் முற்றிலும் தொழில்நுட்ப உதவியை நம்பி 25 வயது இளைஞன் பாத்திரத்தில் அவரை நடிக்கச் செய்து காசு பண்ணமுடியுமா என்று சிலர் முயற்சிக்க விரும்பலாம். ஆனால் அவர் ஏன் அதை விரும்பவேண்டும் என்பதே என் கேள்வி.

தன் 37 வருட சினிமா வாழ்க்கையில் ரஜினி பெரு விருப்பங்கள் எதுவுமில்லாதவராகவே இருந்து வந்திருக்கிறார். சினிமாவில் நுழைகிற காலத்தில் ஒரு நடிகனாக தான் நிலைக்க வேண்டும் என்று இருந்த ஆசையைத் தவிர அவர் பெரிதாக சினிமா சார்ந்து வேறு எதற்கும் ஆசைப்பட்டதாகத் தெரியவில்லை.

பலதரப்பட்ட பாத்திரங்களைச் செய்யும் திறமை இருந்தபோதும், சில வருடங்களிலேயே அவருக்கு அதற்கான வாய்ப்பு பறிக்கப்பட்டுவிட்டது. ஒரே மாதிரியான ∴பார்முலா ஹீரோ பாத்திரங்களை செய்து சூப்பர் ஸ்டாராக்கப்பட்டு, வணிக சினிமாவின் காமதேனுவாக இருக்க வேண்டும் என்று அவருக்கு சினிமா துறை விதித்த "அன்புத் தண்டனை"யை அவர் விரும்பி ஏற்று அடுத்த 30 வருடங்களாக தனக்குள் இருந்த நடிகனைக் கொன்று ஸ்டாராகவே இருந்து வந்திருக்கிறார். இந்த ஸ்டார் பாத்திரத்தில் அவருக்குள் இருந்த நடிகனால் செய்ய முடிந்த ஒரே கிரியேட்டிவிட்டி ஹீரோயிசத்துடன் காமெடியை சேர்த்துக் கொண்டதுதான்.


ரஜினியை வணிக சினிமா சூப்பர் ஸ்டாராக்கி இலாபம் சம்பாதித்தது போல அவரை அரசியல் தலைவராக்கி அரசியல் இலாபம் சம்பாதிக்கும் முயற்சிகளை வெளியில் ஓரிருவர் மேற்கொண்டார்கள். ஆனால் அவர் அதற்கானவன், தான் இல்லை என்ற உள்தெளிவுடனே இருந்து வந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. அவ்வப்போது அரசியல் சார்ந்து சில அதிரடிக் கருத்துகளைப் பேசுவது அவருடைய சினிமா வெற்றிக்கு உதவுகிறது என்பதை புரிந்துகொண்டு அந்த உத்தியைப் பயன்படுத்தியதைத் தவிர, நேரடி அரசியலில் அவருக்கு ஈடுபாடு இல்லை, அரசியல் பற்றிய ஆழமான புரிதலோ தெளிவோ கூட அவருக்கு இருப்பதாக சொல்லமுடியாது.

அரசியலைப் போலவே அவருடைய ஆன்மீக ஈடுபாடும் தெளிவற்றதுதான். அதில் பிறருக்கு உபதேசிப்பதற்கான எந்தத் தத்துவமும் இல்லை. "எல்லாரும் போய் குழந்தை குட்டிகளைப் படிக்க வையுங்க. வயசான அப்பா அம்மாவை நல்லா பாத்துக்குங்க." என்றெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்ல, பெரிய ஆன்மீக அறிவு எதுவும் யாருக்கும் தேவையில்லை. காலம் காலமாக முன்னால் போய் அடிபட்டவன் அடுத்து அடிபட இருப்பவனுக்கு சொல்லக்கூடியவைதான் அவை. தன் அரசியல், ஆன்மீக அறிவு பற்றியெல்லாம் ரஜினியே நன்றாக உணர்ந்திருப்பதனால்தான் அண்மைக் காலமாக அவரே அவை சார்ந்து எதுவும் பொது தளத்தில் பேசுவதில்லை.

எனவே இனி ரஜினி என்ன செய்யவேண்டும்? ரஜினியின் பலம் என்ன? அவருக்கு ஒரு பிராண்ட் வேல்யூ இருக்கிறது என்பது ஒரு பலம். திறமையான நடிகர் என்பது இன்னொரு பலம். இந்த இரண்டு பலத்தையும் அடுத்த கட்டத்துக்கு பயன்படுத்த அவர் என்ன செய்ய வேண்டும் என்றே அவர் சிந்திக்க வேண்டும்.



ரஜினியைப் போலவே கோபக்கார இளைஞன் பாத்திரங்களின் மூலம் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஹிந்தி சினிமாவின் சூப்பர் ஸ்டாராக வலம் வந்த அமிதாப் பச்சன் முதுமையில் ஓர் அற்புதமான குணச்சித்திர நடிகராக தன்னை மாற்றிக் கொண்டு நான்காவது இன்னிங்சை அலட்சியமாக விளையாடிக் கொண்டிருப்பது ரஜினிக்கு ஒரு நல்ல முன்மாதிரி. அது ரஜினிக்கு சாத்தியப்படக்கூடியதுதான். தன் கதையம்சம் அடி - உதை- லவ்வு - பொறுக்கி என்ற ஹீரோ பாத்திரங்கள் சார்ந்து தேக்கமடைந்து போயிருக்கும் தமிழ் சினிமாவுக்கும் நல்லது. ரஜினி போன்ற திறமையான நடிகர் வயது முதிர்ந்த பாத்திரங்களில் நடிக்க முன்வந்தால், அவரைச் சுற்றி வலுவான




கதையம்சத்துடன் முற்றிலும் வேறு விதமான களங்கள், கதைகள் வருவது சாத்தியப் படும். விடலை இரசிகர்களை மட்டுமே நம்பி ஒரே மாதிரி கதை பண்ணி நஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் சினிமா உலகில், ரஜினி போன்ற திறமை சாலியான நடிகர் முதிர்ந்த பாத்திரங்களில் அடர்த்தியான கதைகளில் நடித்தால், மீண்டும் குடும்பங்களை திரையரங்குக்கு வரவழைப்பது சாத்தியப்படும்.


இன்று ஹொலிவுட்டில் பல முன்னாள் ஹீரோக்கள் வயது முதிர்ந்தபின்னர், நல்ல கதையம்சத்துடன் கூடிய சின்ன பட்ஜெட் படங்களை இயக்குவது, அல்லது தயாரிப்பது என்று தங்கள் கலை வாழ்க்கைக்கு புதிய பரிமாணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ரஜினி நடிப்பைத் தவிர இயக்கம் போன்றவற்றில் எப்போதும் ஆர்வம் காட்டியவரே அல்ல. ஆனால் அவர் ஒரு நல்ல தயாரிப்பாளராக மாறமுடியும். நல்ல ஸ்கிரிப்ட்டுடன் வரும் இளைஞர்களை கொண்டு பெரிய திரைக்கு இல்லாவிட்டாலும் கூட, சின்னத் திரைக்கான முழு நீள டெலி பிலிம்களைத் தயாரித்து அளிப்பவராக ரஜினி இயங்கமுடியும். அவருக்கு இருக்கும் பிராண்ட் வேல்யூ இப்படி ஆக்கபூர்வமாக பயன் படுத்தப்பட்டால், டெலிவிஷனின் தன்மையைக் கூட அவரால் மாற்றியமைக்க முடியும்.

இதையெல்லாம் அவரிடம் விவாதித்துச் சொல்லக் கூடிய பார்வையும் ஆற்றலும் கொண்ட நெருக்கமான நண்பர் வட்டமோ தொழில் வட்டமோ தமிழ் சினிமா உலகில் இல்லை என்பது ஓர் இழப்புதான். இரசிகர்கள் அவருக்காக இரத்தம் கொடுக்கலாம். ஆனால் டாக்டர் தான் சிகிச்சை தரமுடியும். சினிமா உலகின் டாக்டர்களாக இருக்க வேண்டிய மீடியா தானும் ரசிகனாக மட்டுமே குறுகிப் போய்விட்டது சமூகத்துக்கு இன்னொரு இழப்பாகும்.

## பிரண்டையின் பயன்கள்

இரத்த மூலத்திற்கு பிரண்டை கை கண்ட மருந்து. இளம் பிரண்டையை ஒன்றிரண்டாக நறுக்கி நெய்விட்டு வதக்கி நன்கு அரைத்து நெல்லிக்காய் அளவுக்கு காலை, மாலை வேளைகளில் சாப்பிட்டு வர இரத்த மூலம் குணமாகும். திடீரென்று சுளுக்கு ஏற்பட்டு வீக்கம் வலி ஏற்பட்டால் பிரண்டையை இடித்து சாறெடுத்து அதனுடன் சிறிது புளி, உப்பும் சேர்த்து குழம்புப் பதமாக காய்ச்சி இளம் சூட்டில் பற்றுப் போட்டு வந்தால் இரண்டொரு நாளில் குணமாகும்.






# 121212

ஒரு குறிப்பிட்ட நாளில், தங்கள் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆசைப்படும் பெற்றோர், இது குறித்து மருத்துவமனைகளின் டாக்டர்களை வற்புறுத்த, அவர்களும் (சிசேரியன் முறையில் தான்) அந்த பிரசவங்களை நடத்தித் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஒரே ஒரு நிபந்தனை, அப்போது கருவுற்று ஒன்பது மாதங்களாவது ஆகியிருக்க வேண்டும் என்பது தான். ஆனால், தொடர்ந்து இது போன்ற கோரிக்கைகள் பலரிடமிருந்தும் வரவே, "ஊஹூம்" என்று உதட்டைப் பிதுக்கி விட்டனர் டாக்டர்கள்.

எதற்கு அந்த குறிப்பிட்ட திகதிக்கு இவ்வளவு மவுசு? அது, 12.12.12 என்பதால் தான். அதாவது, டிசம்பர் மாதம், 12ஆம் திகதி, 2012ஆம் ஆண்டு.

இந்த, 12.12.12 மிக அதிர்ஷ்டமான திகதி. அது ஆயிரம் ஆண்டுகளுக்கு, 12 முறை மட்டுமே வரும். இதை விளம்பரப்படுத்தும் சில பிரபல ஹோட்டல்கள், தங்கள் அரங்குகளில் அன்று திருமணம் செய்து கொள்ளச் சொல்லி காதலர்களை வசீகரிக்கின்றனர். "மிகவும் எளிதாக உங்கள் திருமண நாளை நினைவு வைத்துக் கொள்ளலாம்..." என்று கூடுதல் தூண்டில் வேறு!

பன்னிரண்டு என்ற எண்ணுக்கு, பல மகத்துவங்கள் உண்டு. ஆண்டுக்கு, 12 மாதங்கள். ராசிகளின் எண்ணிக்கை, 12. ஒரு டசின் என்றால் எவ்வளவு? 12 தானே! கடிகாரத்தை பாருங்கள், 12 என்ற எண் வரை எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கும். பன்னிரண்டு, ஆறு, நான்கு, மூன்று, இரண்டு ஆகிய அத்தனை எண்களாலும் பின்னம் இல்லாமல் வகுபடும் சிறிய எண் 12 தான்.

"மக்களுக்குக் கொண்டாட்டம், ரசிகர்களுக்குத் திருவிழா..." என்ற அறிவிப்புடன் வெளியாக உள்ளது ரஜினியின் சிவாஜி திரைப்படம் - முப்பரிமாண வடிவில். டிசம்பர் 12 அன்று, இத்திரைப்படம் வெளியாக இன்னொரு காரணம், அன்று நடிகர் ரஜினிகாந்தின் பிறந்தநாள்.

அவ்வப்போது, இது போன்ற தினங்கள் குறித்து, (10.10.10 - 11.11.11 போன்று) பரபரப்போடு ஒரு பயமுறுத்தல் எப்போதும் எழுப்பப் படுவது வழக்கம். 12.12.12 அன்று உலகம் அழிந்து விடும் என்று, இப்போதும் சிலர் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

மேற்கத்திய ஜோதிடர்கள் கூறுவது இதைத்தான் 12.12.12 அன்று தொடங்கும் உலக அழிவு, டிசம்பர், 21, 2012 அன்று அந்த அழிவு முழுமையடைந்து, உலகமே காணாமல் போகும். அதாவது டிசம்பர் 21, 2012 அன்று சூரியன் பால்வெளி வீதிமண்டலத்தின் மையத்துக்கு மேல் உயரும். இதனால், உலகம் அழியலாம்.

இந்திய ஜோதிடர்கள், இப்போது நடப்பது கலியுகம் என்கின்றனர்.

இந்த யுகத்தின் முடிவு என்பது உலகின் அழிவு என்றும் கூறுகின்றனர். அதாவது, கலியுகத்தின் முடிவில், யுக புருஷன் குதிரையில் தோன்றுவான். வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றத்தினால் உலகம் அழிந்துவிடும் என்கின்றனர்.

இதற்கு முந்தைய யுகங்கள், எத்தனை வருடங்கள் கொண்டவையாக இருந்தன என்று பார்ப்போம். சத்ய யுகம் என்பது, 17,28,000 ஆண்டுகள் கொண்டதாகவும், திரேதா யுகம் என்பது, 12,96,000 ஆண்டுகள் கொண்டதாகவும், துவாபர யுகம் என்பது, 8,64,000 ஆண்டுகள் கொண்டதாகவும் இருந்தது. கலியுகம் என்பது, 4,32,000 ஆண்டுகள் கொண்டது என்கின்றனர். கலியுகம் பிறந்தது, கி.மு. 3102 அன்று. அப்படிப் பார்த்தால், இதுவரை, 5114 ஆண்டுகள் தான் முடிவடைந்துள்ளன. இன்னமும், 4,26,886 ஆண்டுகள் பாக்கி உள்ளன.

செவ்வாய் மற்றும் சூரியனால் கட்டுப்படுத் தப்படும் நாடுகள், சுனாமி, புயல், நிலநடுக்கம், எரிமலை ஆகியவற்றால், 12.12.12 அன்று பாதிக்கப்பட வாய்ப்பு உண்டாம். இது போன்ற நாடுகள், பெரும்பாலும் தீவுப் பகுதிகளாக உள்ளன. அவுஸ்திரேலியா, இலங்கை ஆகியவை கூட அழிவை சந்திக்கலாம் என்கின்றனர்.

அமெரிக்காவின் பழங்குடி இனத்தவரிடையே வாய் மொழியாக நிலவி வரும் ஒரு கலண்டர், மிகவும் நீண்ட காலத்தை கொண்டது. 5125 ஆண்டுகள் கொண்ட, இந்த மாயன் இனக் கலண்டரின் இறுதி நாள், 12.12.12. இப்படி யூகங்கள் கொடி கட்டிப்பறக்கின்றன.

நிபுரு என்ற கிரகத்தின் மீது, பூமி அன்று மோதப்போகிறது என்பதிலிருந்து, அன்று கொத்து கொத்தாக கோடிக்கணக்கான மக்கள் உலக வாழ்க்கையை துறந்து, ஆன்மிகத்தில் ஈடுபடப் போகின்றனர் என்பது வரை, பலவித பயமுறுத்தல்கள் உலவுகின்றன.

இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், புதிய தோஹா சர்வதேச விமான நிலையம், அன்றுதான் திறக்கப்பட உள்ளது. கத்தார் நாட்டில், ஒரே சர்வதேச விமான நிலையமாக இது விளங்கப் போகிறது.

அடுத்த, 2013இல் தான் உலக அரேபிய பந்தய குதிரை போட்டிகள் மாநாடு பிரான்சில் நடத்தப்பட உள்ளது. ஆனால், இதை அதிகார பூர்வமாக அவர்கள் அறிவிக்கப்போவது, 12.12.12 அன்றுதான்.

அமெரிக்காவில் ஒரு விபரீதம் நடக்க வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகளே பதறுகின்றனர். அங்குள்ள பத்து இலட்சம் நாய்களின் உடலில், "ஹார்ட் வோர்ம்" எனப்படும் புழு பரவி, உள்ளன. இது பெரும் தொற்றுநோயாக பரவி, அமெரிக்கர்களை பாதிக்க வாய்ப்புண்டு. எனவே, 12.12.12 என்ற பெயரில், ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். மேற்படி பாதிப்பைத் தடுக்கும் வகையில், 12 டோஸ் தடுப்பு மருந்தை, 12 சதவீதம் பேருக்கு, 2012க்குள் அளிக்க இருக்கின்றனர்.

எப்படியோ, பலவித பயமுறுத்தல்களுக்கான விடை, 13.12.12 அன்று கிடைத்துவிடும்!




மூக்கினுள் ஒவ்வாத பொருள் ஒன்று நுழையும் போது, அதை வெளியே துரத்த நம் உடம்பு செய்கிற வித்தை தான் தும்மல். நுரையீரலில் இருந்து காற்று வேகமாகவும், திடீரென்றும் மூக்கு, வாய் வழியாக வெளியேறுவதால் பலூன் வெடிப்பது போல் அப்படியொரு சத்தம்.

தும்மல் ஒரு அனிச்சைச் செயல். மூக்கினுள் ஆகாத பொருள் நுழையும்போது, உடனே அதை வெளியேற்ற, மூளை எடுக்கும் நேரடி நடவடிக்கை தான் தும்மல்.

தும்மும் போது மனிதர்களின் முகம் ஏன் அஷ்ட கோணலாக மாறுகிறது தெரியுமா? நுரையீரலிலிருந்து தும்மலுக்கான காற்று வெளியே வேகமாக அனுப்பப்படுகிறது. நுரையீரலில் காற்றழுத்தம் குறைகிறது. புதுக்காற்றை உள் வாங்கி தும்மல் உருவாகிறது.

மூச்சை உள்ளுக்கு இழுக்கிற போது, மூக்கினுள் இருக்கிற எதிரியும், காற்றோடு காற்றாக உள்ளே போய் விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த, "அஷ்ட" கோணல்.

தும்மலுக்கான காற்றை உள்ளே இழுக்கிறோம். காற்று சேர்வதற்கு தாமதமானால் மூளை தும்மலை, "கான்சல்" செய்து விடும். அப்போது, தும்மல், வந்த மாதிரி வந்து, வராத மாதிரி போய் விடுகிறது.

தூசு, வைரஸ் கிருமிகள் மட்டுமல்லாமல், அலர்ஜி, தடுமன் காரணமாகவும் தும்மல் வருகிறது. பனியால் தும்மல், வானத்தை அண்ணாந்து பார்த்தால் தும்மல், அதிக வெளிச்சத்தைப் பார்த்தால் தும்மல் - இப்படி தும்மலில் பல வகை உண்டு.

சிலருக்கு தும்மல் ஒரு, ஆசுவாசத்தைக் கொடுக்கும். அதற்காக துணியைத் திரித்து மூக்கினுள் விட்டு தும்மலை ஏற்படுத்திக் கொள்வர்...

## இயற்கை புத்தி!

டாக்டர் உ.வே.சாவின் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் நாகையில் நாகைக்காரோண ஸ்தல புராணம் பாடி அரங்கேற்றிக் கொண்டிருந்தார். இந்த அரங்கேற்றத்தின்போது ஒரு பண்டாரம் தினம் வருவார். அவருக்குக் கல்வியறிவு கிடையாது. ஆயினும் விஷயமில்லாத விஷயங்களைப் பற்றி அடிக்கடி ஆட்சேபித்து, பிரசங்கம் நடைபெறுகை யில் தொந்தரவு செய்து வந்தார். எப்படியாவது அதை நிறுத்த வேண்டுமென நினைத்தார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

ஒரு நாள் அரங்கேற்ற விளக்கவுரையின் நடுவே பிள்ளையவர்கள் இப்படிக் கூறினார்:

"இராவண சம்ஹாரத்திற்குப் பிறகு இராமபிரான் போர் செய்த சிரமத்தினால் அனுமார் மடியில் தலை வைத்து உறங்கினார். அவர் அயர்ந்து நித்திரை செய்கையில் அனுமார் தன் வால் நுனியை ராமரது காதினுள் நுழைத்தார்! என்னவோ ஏதோவென்று திடுக்கிட்டு எழுந்த இராமன், "இதென்ன" எனக் கேட்க அனுமார் சிரித்தபடி,"இது என் இயற்கை புத்தி, நான் என்ன செய்வேன்?" என்றாராம்! அதுபோலத்தான் இந்தப் பண்டாரமும். அவர் நல்லவர்தான். ஆனாலும் அவரது இயற்கை புத்தி அவரை விடவில்லை!"

அதைக் கேட்டு கூட்டத்திலிருந்த அனைவரும் ஏகமாய் நகைக்க, பண்டாரம் அது முதல் வாயே திறப்பதில்லை!

**('ரசிக்கவும் சிந்திக்கவும் 50 நிகழ்ச்சிகள்' நூலில்)**

## அமைதி ஞானம்!

தீட்சை முடிந்து, ஞானம் கனிந்து, தர்மத்தை மக்களிடம் உபதேசிக்க, பூர்ணா என்ற அந்த சீடர் புத்தரிடம் விடை பெற வந்தார்.

"பூர்ணா! நீ எந்தப் பிரதேசத்தில் தர்மயாத்திரையைத் தொடங்கப் போகிறாய்?" என்றார் புத்தர்.

"சூனா பராந்தகம்" என்ற இடத்தில் சுவாமி!"

"மகனே! அந்தப் பகுதி மக்கள் நீ தர்மத்தைப் போதிக்கும்போது உன்னை நிந்தனை செய்து வசைமாரி பொழிந்தால் என்ன செய்வாய்?"

"இவர்கள் நல்லவர்கள். கை நீட்டிக் காயப்படுத்தாமல் வாயளவில் நிற்கிறார்களே என்று மகிழ்ச்சியடைவேன் சுவாமி!"

"வாய் திறந்து வசை பாடியவர்கள் அடுத்து கை நீட்டி அடித்தால்?"

"இவர்கள்தான் எவ்வளவு நல்லவர்கள்! ஆயுதங்கள் கொண்டு தாக்காமல் வெறுங் கைகளால் அடிப்பதோடு நிறுத்திக் கொண்டார்கள்" என்று அக மகிழ்வேன் சுவாமி!"

"சரி! ஆயுதங்களால் உன்னை அவர்கள் தாக்கினால்?"

"ஆஹா. இவர்கள் மிகமிக நல்லவர்கள். பிறவித் தளையிலிருந்து விடுபட ஒவ்வொருவரும் எந்தெந்த வழியிலோ பாடுபடும்போது, எனக்கு இவர்கள் எளிதாக முக்திக்கு வழி செய்து விட்டார்களே" என்று கை கூப்பி வாழ்த்துவேன் கருணை வேந்தே!"

"பூர்ணா! உனக்குப் புத்த ஞானம் கனிந்துவிட்டது. போய் வா!"

சீடர் புத்தபிரானிடம் விடைபெற்றுக் கொண்டார்.

நம் ஒவ்வொருவருக்கும் இந்தப் புத்த ஞானம் கனிந்தால்... அதைவிட அமைதியான வாழ்க்கை வேறேது!



**('மனமும் மனிதனும்' என்ற நூலில் தமிழருவி மணியன்)**

# பாரதியார் இன்றைய எழுத்தாளர்களின் முன்னோடி

- க.நா.சுப்ரமணியம்



பாரதியாரின் இன்றைய பாதிப்பு எப்படி நமது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வியாபித்து நிற்கிறதோ அவ்வளவுக்கு அவர் இருந்து பாடிய போதும் அது இருந்தது. இந்த அளவு விஸ்தீர்ணம் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் அப்போது இருந்த அளவில் அவரைக் கேட்டவர்களும், அவருடன் பழகியவர்களும் ஒன்று பத்து நூறாக இன்று அதைப் பெருக்கிச் சில சமயம் முன்னுக்குப்பின் முரணாகவும் சொல்வதற்குக் காரணம், இந்தப் பாதிப்புதான். வேண்டுமென்றே இவர்கள் மெய்யல்லாததைக் கூறுகிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஏதோ இலாபத்தைக் கருதி கதைகளைப் பெருக்கிக் கூறுகிறார்கள் என்றும் சொல்ல மாட்டேன். உண்மையில் பாரதி என்கிற உருவம் அவர்கள் உள்ளத்திலேயே வளர்ந்து நிஜம் போன்ற விசுவரூபங்கள் பல எடுக்கும் அளவுக்குச் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்கிறது என்பதைப் பாரதிக்கும் பாரதி பற்றிப் பேசுபவர்களுக்கும் இழுக்காகக் கருத வேண்டியதில்லை.

பாரதிதான் வாழ்நாளிலேயே நேரில் அறிந்தவர்களுக்கே ஒரு சுவாரசியமான மனிதராக, புரியாத புதிராகத்தான் இருந்திருக்கிறார். இந்த சுவாரசியத்தன்மை எங்கிருந்து வந்தது?

எதிர்பார்ப்பதை, பிறர் தன்னிடம் எதிர்பார்ப்பதைச் செய்யாதவர் என்பது ஒன்று. நெருங்கியவர்கள்கூட குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பாரதியார் எப்படி நடந்து கொண்டிருப்பார் என்று சொல்ல முடியாமல் தவித்திருக்கின்றனர்.

தான் தனிப்பட்டவன் என்கிற சிந்தனையும் பாரதிக்கு இருந்திருப்பதாகவே தெரிகிறது. கூட்டத்தில் முழங்கியது ஒரு புறம் இருக்க, அவர் கவிதையிலும் வசனத்திலும் பல இடங்களிலும் அவருடையத் தனித்தன்மை தனியாகவே தொனிக்கிறது. இந்தத் தனிமைக்குக் காரணம் அவர் ஏற்றுக் கொள்ளாத - கடைசிவரையில் முழுவதும் ஏற்றுக்கொள்ளாத ஒரு சூழ்நிலையில், ஒரு கௌரவத்தன்மையில் வாழ வேண்டியதாக இருந்தது. வாழ்வுக்கும் அவருக்கும் இடையே இடைவிடாத போராட்டம் இருந்தது. அவர் பணத்துக்காகக் கஷ்டப்பட்டார் என்பதையோ, பட்டினி கிடந்தார் என்பதையோ நான் சொல்லவில்லை. கஷ்டப்பட்டிருக்கலாம் - பட்டினியும் கிடந்திருக்கலாம். முக்கியமாகச் சின்னத்தனங்கள் பல செய்து பணம் தேட முயலாதவர்கள் அன்றும் இன்றும் என்றைக்கும் பட வேண்டிய கஷ்டங்கள் அவை - அதைச் சொல்லவில்லை நான்.

மக்களின் போராட்டங்கள் பூராவும் பாரதியில் எதிரொலிப்பதை அவர் வரிகள் ஒவ்வொன்றிலும் நாம் காணலாம். நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் போராட்டம் நடப்பதையும், நம்பிக்கை, நமது பாரம்பரியமான தெய்வ நம்பிக்கை அவர் கவிதையில் மலர்வதையும் நாம் உணரலாம். சர்தார்ண வரம்புகள் கட்டிய வாழ்வும் கற்பனாதீதமான ஒரு வாழ்வும் அவர் கவிதையிலும் வசனத்திலும் போராடுவதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. உள்ளது மாறி இருக்கவேண்டியதை உருப்பெறச் செய்ய இடைவிடாத போராட்டம் அவசியமாகிறது. இந்தப் போராட்டத்தை, தன் எழுத்தில் காட்டுபவனையே எழுத்தாளன் என்று சிறப்பாகப் பாராட்ட வேண்டும். உள்ளதை மாற்றி எதிர்காலத்தை நோக்க முயலுபவனைக் கவி என்று சொல்லலாம் இலக்கியாசிரியன் என்று சொல்லலாம், கலைஞர் என்று சொல்லலாம். உள்ளதை உள்ளபடி இன்றைக்கு மட்டும் தேவைப்படுகிற அளவில் கூறுபவனை நல்ல பத்திரிகாசிரியன் என்று சொல்லலாம். உள்ளதை ஏற்காமல் பழமையை மட்டும் போற்றித் தொழுது கொண்டிருப்பவனை சநாதனி, பண்டிதன் என்று கூறலாம்.

எழுத்தாளனாகப் பாரதியைக் காணும்போது அவர் காலத்தை எதிரொலித்து மேலே எதிர்காலத்தை நோக்கி வளரச் செய்வதற்கு அடிகோலியவர், எப்படி வளருமோ என்று தவித்தவர் என்பது நிதரிசனமாகத் தெரிகிறது. சமூகப் பிரச்சினைகள், அரசியல், தத்துவப் பிரச்சினைகள், நடப்பு முறைகள் எல்லாவற்றிலுமே இந்தப் போராட்டத்தைத் தன்னளவில் உணர்ந்து உருக்கொடுத்திருக்கிறார் பாரதியார். இந்தப் போராட்டம் காரணமாக எழுந்த பாரதித் தன்மையைத்தான் அவர் எழுத்துகளைப் படிக்கும்தோறும் படிக்கும்தோறும் ஒரு வேகமாக நாம் உணருகிறோம். பாரதி வார்த்தைகளுக்கு உள்ள அந்த வேகம், அவருக்கே உரியது. அவருக்கு முன்னும் பின்னும் அந்த வேகம் தமிழில் உருவாகவில்லை - இதே அளவில் என்பது அவரைத் தனியொரு எழுத்தாளனாக நமக்குக் காட்டுகிறது.

கனவுகள் கண்டவர், தீர்க்கதரிசனம் வாய்ந்தவர், இன்றைய நடப்புகள் பற்றிக் குமுறி எழுந்து கடுமையான விமரிசனம் செய்தவர். இத்தனைக்கும் காரணம் காலத்தில் நடக்கிற போராட்டத்தையும், அது எத்திசை செல்ல வேண்டும் என்றும் உணர்ந்து நடக்க வேண்டும் என்றும் அதில் தனக்குள்ள பொறுப்பையும் உணர்ந்தவர் பாரதியார்.

எழுத்தாளனின் இந்தப் பொறுப்பு மகத்தானது. இதன் சக்தியை உணர்ந்தவர் சிலர் இப்பொறுப்பை நம்மால் வகிக்க இயலாது என்று ஒதுங்கிவிடுகின்றனர் - அல்லது தங்கள் நோக்கங்களை மட்டும் காப்பாற்றிக்கொண்டு நகர்ந்து விடுகின்றனர். பாரதிக்கு இருந்த பொறுப்பு இன்று எழுத்தாளர்கள் எல்லோருக்குமே உண்டு. இன்றைய நிலையை மீறி வரப்போவதைப் பிரக்ஞையுடன் உருவாக்குகிற பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. அப்பொறுப்பை, கவி பாரதியாரை முன்னோடியாகக் கொண்டு இன்றுள்ள இலக்கியாசிரியர்கள் செய்ய வேண்டிய அவசியம் இன்று அதிகமாகவே இருக்கிறது.

பொறுப்பை ஏற்றுக்கொள்கிற பணியில் பாரதி சிறப்பாகவே வழி காட்டியிருக்கிறார். எந்த எழுத்தும் இன்றையத் தேவையை மட்டும் பூர்த்தி செய்தால் போதாது. நாளை, நாளைக்கு மறுநாள், அதற்கும் மறுநாள் என்று வளர்ச்சிக்கு வழி செய்வது அவசியம். ஏதோ கலண்டரில் தாள்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிழிபடுகின்றன - அதன் காரணமாகவே நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றன என்று இன்று ஏற்றுக் கொண்டுவிடுவது சுலபமாக இருக்கிறது. அதனால் எழுத்தாளன் என்பவர்களாவது அப்படி எண்ணாதிருக்கப் பழக வேண்டும். நமது சொல்லாலும் செயலாலும் நாளையும் மறுநாளும் அதற்கடுத்த நாளும் உருவாகின்றன என்று உணர்ந்து அதற்குப் பொறுப்பும் ஏற்க வேண்டும்.

பாரதியைப் படிக்கும்போது இது ஒரு முக்கியமான படிப்பினையாகத் தோன்றுகிறது. இன்று, இன்று என்பதுடன் நின்றுவிடாமல் நாளை என்றும், அதற்கு மறுநாள் என்றும் வளர்ச்சியைச் சாத்தியமாக்குவதே நல்ல எழுத்து.

> நமக்கெல்லாம் இன்றைய சூழ்நிலையில் பணத்தையோ, பதவியையோ தவிர வேறு ஒன்றும் தேவையில்லைப் போலத் தோன்றுகிறது. ஆனால் மனிதனுக்கு, அவன் போய்விட்ட பிறகும் உயிர்தர, உண்மை தேவைப்படுகிறது. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய பாரதியாரை முன்னோடியாகக் கொண்டுள்ள இன்றைய எழுத்தாளத் தலைமுறை பாக்கியம் செய்தது.

அதுதவிர, பாரதியாரை நாம் முன்னோடியாகக் கருத வேண்டியது இன்னொரு அம்சத்தினாலும் சிறப்புப் பெறுகிறது. பாரதியாரின் வேகம், எதிர்கால நோக்கம் என்கிற இரண்டுமே அவர் மனத்தில், உள்ளத்தில், கற்பனையில் உண்மை என்கிற திரவத்தில் உருவானவை.

உண்மையை ஓரளவுக்குக் கொண்டாடுபவர்கள் கூடப் பலர் சாதாரணமாகப் பிழைக்கத் தெரியாதவன் என்று ஒதுங்கிவிடுவார்கள் - உண்மையை உள்ளபடி சொல்பவனைக் கண்டால். இது நமது இன்றைய அனுபவமாகும், யதார்த்தவாதி வெகுஜன விரோதி என்றும் வழக்குண்டு. ஆனால் பாரதியார் உண்மை என்கிற அளவிலும் நமக்கெல்லாம் முன்னோடியாக நிற்பவர். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் அது வாக்கிலும் வரும் என்று பாரதியாரே சொன்னார். அதைக் கவனத்தில் வைக்க வேண்டியது மிக அவசியம்.

உண்மையும் ஓரளவுக்கு வளருகிறது - உண்மையும் வளர்க்கப்படுவது தான். பொய்யும் வளர்க்கப்படுவதுதான். பாரதியாரின் வாக்கிலே அவர் காலத்துச் சூழ்நிலையைப் பூரணமாக அறியாத இந்த நிலையிலும்கூட உண்மை இருந்ததை இத்தனை நாள் கழித்தும் நாம் அறிய முடிகிறது. எவருடைய எழுத்திலேயும் உள்ள உண்மையை அறிந்து கொண்டு விடமுடியும் என்பது எழுத்தின் சிறப்பைக் காட்டுகிறது. உண்மையையும் அதல்லாததையும் கண்டுகொள்கிற காரியத்தை வாசகர்கள் செய்கிறார்கள், காலம் செய்கிறது, விமர்சகன் செய்கிறான்.

உள்ளத்து உண்மையும் தனக்குத் தெரிந்ததை உண்மையென்று ஏற்று நடப்பதும் இலக்கியாசிரியனுக்கு மிகவும் அவசியமான தன்மைகளில் ஒன்றாகும். இந்த அம்சத்தை நாம் பாரதியின் வாக்குகளிலிருந்து நமக்குத் தேவைப்படுகிற அளவுக்கு நம்மால் தாங்கக்கூடிய அளவு கிரகித்துக் கொள்ளவேண்டும். நமக்கெல்லாம் இன்றைய சூழ்நிலையில் பணத்தையோ, பதவியையோ தவிர வேறு ஒன்றும் தேவையில்லைப் போலத் தோன்றுகிறது. ஆனால் மனிதனுக்கு, அவன் போய்விட்ட பிறகும் உயிர்தர, உண்மை தேவைப்படுகிறது. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய பாரதியாரை முன்னோடியாகக் கொண்டுள்ள இன்றைய எழுத்தாளத் தலைமுறை பாக்கியம் செய்தது. பாரதியின் எழுத்திலே சக்தி சிறிதளவாவது இருக்குமானால் - அதிகமே உண்டு என்று நமக்குத் தெரியும் - அதை நம் உள்ளத்தில் வியாபிக்க விடுவதே நாம் பாரதியை முன்னோடியாக ஏற்றுக்கொள்வது என்பதற்குச் சரியான அர்த்தம்.

வேகம், நோக்கம், உண்மை என்கிற அம்சங்களில் பாரதி நமக்கெல்லாம் சிறப்பான முன்னோடியாக அமைவது எதிர்காலத்துக்கு மிகவும் நல்லது. அதிலும மூன்றாவது அம்சமாகிய உண்மை - இன்று அது கணிசமான அளவுக்கு அரிதாகிக் கொண்டிருக்கிறது என்பதனால் - அதிகமாக அவசியமாகிறது.

பாரதியாருடைய கவிதையையோ வசனத்தையோ படிக்கும்போது வரிக்கு வரி அவர் சுதந்திரத்தை நாடியது நமக்குத் தெரிகிறது. அந்த மாதிரியான, தேச சுதந்திரத்துடன் சொந்த சுதந்திரத்தையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இன்றும் இருக்கிறது. பாரதியைப் படிக்கும்போது இந்த எழுத்தையும் இதை எழுதியவரையும் எந்த விலை கொடுத்தும் யாரும் வாங்கிவிட முடியாது என்கிற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இன்றைய எழுத்தாளர்கள் விலை பேசப்படாமல் இருக்க வேண்டும் என்கிற அவசியத்தை நாம் உணருவதற்கு பாரதியாரின் எழுத்துகள் நமக்கு பயன்படும். அந்த அளவிலும் பாரதி நம் தலைமுறை எழுத்தாளருக்கு முன்னோடியாக விளங்குகிறார்.

நன்றி : இலக்கிய வட்டம், இதழ் 4 - 3.1.1964

# "பெற்றோல் இல்லை" வாகன சாரதிகள் கவலை

(வேலணை)

தீவுப் பகுதியில் உள்ள எரிபொருள் வழங்கும் நிலையமொன்றில் எரிபொருளொன்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதை அங்கு தொங்கும் 'அறிவித்தல்' ஒன்று வெளிப்படுத்திக்காட்டுகிறது.


வேலணை - வங்களாவாடிச்சந்தியில் உள்ள ஒரு எரிபொருள் வழங்கும் நிலையமொன்றிலேயே "பெற்றோல் இல்லை" என்ற வாசகம் அடிக்கடி காணப்படுவதால், தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பொருட்டு, அங்கு செல்லும் வாகன சாரதிகள் பலரும் ஏமாற்றமடைவதோடு, தங்களது அதிருப்தியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

போர் நிலை தணிந்து, தென்பகுதிக்கான பாதைகள் சீராகிய இந்நாட்களில், குறிப்பிட்ட இந்த எரிபொருள் நிலையத்தில் அடிக்கடி பெற்றோல் மற்றும் டீசல் போன்றவை தீர்ந்து போவது குறித்து, பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் வைத்திருப்போர் மிகுந்த கவலை கொண்டுள்ளனர்.

இதேவேளை, வேலணை - வங்களாவாடிச் சந்தியூடாக யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு மற்றும் ஊர்காவற்றுறைக்கும் அதே போன்று புங்குடுதீவு மற்றும் ஊர்காவற்துறையில் இருந்து யாழ். நோக்கி புறப்படுகின்ற தனியார் பயணிகளுக்கான பேருந்துகளும், வேறுபல வாகனங்களும் குறிப்பிட்ட இவ் எரிபொருள் வழங்கும் நிலையத்தில் அடிக்கடி தங்களுக்கான எரிபொருளை நிரப்பிச் செல்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (138)

# போக்குவரத்து பிரச்சினைக்குத் தீர்வு





ஊர்காவற்றுறையில் இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் சிற்றூர்தி சங்கத்தினருக்கும் அண்மையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனியார் சங்கத்தினர் தங்களது போக்குவரத்து சேவையை தற்காலிகமாக இடை நிறுத்தியிருந்தனர். ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் தனியார் சிற்றூர்தி சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீவக பொலிஸ் அத்தியட்சகர் கேரத், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ஊர்காவற்றுறை பிரதேச தவிசாளரும் ஈ.பி.டி.பி. பிரதேச அமைப்பாளருமான ம.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் இப்பகுதியினரின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு, சுமுகமாக தீர்க்கப்பட்டு, போக்குவரத்து சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது.

# பருத்தித்துறை - தம்பசிட்டி வீதி காபற்றாக புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - தம்பசிட்டி வீதியிலிருந்து ஹாட்லிக் கல்லூரி வரையான வீதி காபற் இட்டு புனரமைப்பதற்கான நடவடிக்கையை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

முன்னர் இவ்வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்த நிலையில், குண்டு குழியுமாக மிக மோசமாக சேதமடைந்திருந்தது. இதனால் இவ்வீதியுடாக பயணத்தை மேற்கொள்வோர் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர். இதேவேளை இவ் வீதியால் பாடசாலை மாணவர்கள் முதல் அலுவலகர்கள், வியாபாரிகள் எனப்பலர் பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில், தற்போது இவ்வீதி காபற் இட்டு புனரமைக்கப்படுவதால் மக்கள் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (109)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் கார்த்திகை மாத மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலர் ஆறுமுகமான பொருள்,திருப்பாவை, கந்தரநுபூதி, சிறுவர் கதைகள் ஆறுமுக நாவலரின் சைவ சமய வினா விடை, திருமந்திரக்கதைகள், திருமுறை போன்ற பல ஆன்மீக தகவல்களைத்தாங்கி வெளிவந்துள்ளது.

# வீதியில் தேங்கும் குப்பையால் டெங்கு நோய் பரவும் அபாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை-மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை வீதியில் உள்ள வீடுகளுக்கு முன்னால் இருமருங்கிலும் வைக்கப்படும் குப்பைகள் அகற்றப்படாமல் காணப்படுவதால்,அவ் வீதியூடாகச் செல்வோரும் அப்பகுதிப் பொதும்க்களும் பல்வேறு சிரமங்களைத் தாம் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதி வீடுகளுக்கு முன்பாக இரண்டுவார காலமாக குப்பைகள் உரைப்பைகளில் கட்டப்பட்டும், வெளியே கொட்டப்பட்ட நிலையிலும் காணப்படுவதால், அவற்றை கால்நடைகள் கிளறி வீதிக்கு கொண்டுவருவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை மழை பெய்தால் ஈக்கள் மற்றும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் வாய்ப்பும் காணப்படுவதாகவும், இதனால் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகத்தெரிவிக்கும் மக்கள், இக்குப்பைகளை அகற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.



ஐ.ஓ.எம்.நிறுவனப் பிரதிநிதிகள் குழு வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.

(படம்: - கே. நந்தகுமார்)

# ஆயுர்வேதம்



## கொதித்து ஆறிய தண்ணீரும், குடல் வாயுவும்...

வாயு சம்பந்தமான தொந்தரவு சிலரை விடாமல் தொற்றிக் கொண்டு தொல்லை தருவதுண்டு. நாள்தோறும் அடிக்கடி தொடர்ந்து ஏப்பம் வந்து தொல்லையாக இருக்கும். நெஞ்சில் எரிச்சலும், உடலில் அங்கங்கு வலியும், குத்தலும் இருக்கும். இது வாயுவினால் ஏற்படும் தொந்தரவுதான்.

குடல் பகுதியில் ஸ்மானன் என்றும் அபானன் என்றும் இரு வாயுக்கள் செயல்படுகின்றன. உணவில் வாயுவைக் கூட்டும் துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, கொண்டைக் கடலை, வேர்க்கடலை, பச்சைப் பயறு, உருளைக் கிழங்கு, வாழைக்காய், கொத்தவரங்காய், பூசனிக்காய் போன்றவற்றை ஆறிய நிலையில் சாப்பிட்டால் ஜீரணத்தின் இறுதியில், அதிலிருந்து கிளம்பும் வாயுவானது, குடலில் அதிகம் சேருகிறது. இந்தக் காற்றை வெளியேற்ற உடல் முயற்சி செய்கிறபோது அது ஏப்பமாகவும், கீழ்க்காற்றாகவும் அதிக சத்தத்துடன் வெளியேறுகிறது. கூச்சம் காரணமாக, இதை அடக்க முற்பட்டால் இந்த இரு பாதைகளையும் தவிர்த்து, உடல் உட்புறக் குழாய்களின் வழியாக நகரும்போது, உடலில் குத்தல் வலியை ஏற்படுத்தும். வயிற்றிலுள்ள பித்தத்தைக் கிளறிவிட்டு, மேல் எழும்போது நெஞ்சில் எரிச்சலை ஏற்படுத்துகிறது. அதனால், இந்தத் தொந்தரவுகள் உள்ளவர்கள் மேற்குறிப்பிட்ட உணவுப் பொருள்களைத் தவிர்ப்பது நல்லது.

வாயுவைக் கீழ் நோக்கி அதன் இருப்பிடமாகிய பெருங்குடல் பகுதிக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்படியும் அங்கு அடங்காமற் போனால் வஸ்தி எனப்படும் தைல மற்றும் கஷாய எனிமா முறைகளைப் பயன்படுத்தி வெளியேற்ற வேண்டும். வெளிப்புறத்தில் வயிற்றின் மீது வெதுவெதுப்பாக நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் ஆகியவற்றைச் சம அளவாகக் கலந்து, தடவி, வெந்நீர் ஒத்தடம் கொடுத்தல் போன்ற சிகிச்சை முறைகள் நல்லது. பித்த எரிச்சலும் உள்ளதால், காய்ந்த திராட்சையை நெய்யில் வதக்கிச் சாப்பிடுவதால் பித்த -வாயு உபாதைகளைக் குடல் பகுதியிலிருந்து வெளியேற்றலாம்.

பித்த-வாயு உபாதைகளில் நெய் ஒரு நல்ல மருந்தாகும். நெய்யில் காய்ச்சப்பட்டு தயாரிக்கப்படும் தாடிமாதிகிருதம் எனும் மருந்தை சுமார் 10-15 மி.லீ. காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். விதார்யாதி கிருதம் எனும் நெய் மருந்தை மாலையில் 15 மி.லீ. வெறும் வயிற்றில் நக்கிச் சாப்பிடவும். இனிப்புச் சுவையை சற்று உணவில் அதிகம் கூட்டிச் சேர்த்தால், பித்த-வாயுக்களை நம்மால் எளிதில் சமாளிக்க முடியும். கொதித்து ஆறிய தண்ணீரை குடிக்கப் பயன்படுத்தினால், குடல் வாயுவை மட்டுமல்ல, பித்த எரிச்சலையும் நாம் கட்டுப்படுத்திவிடலாம்.

பித்த எரிச்சல் குறையாமலிருந்தால் அவிபத்தி எனும் சூரண மருந்தை 5-8 கிராம் எடுத்து 10-15 மி.லீ. சுத்தமான தேனில் குழைத்து, காலை உணவு செரித்து மதிய உணவுக்கு முன், நக்கிச் சாப்பிட, குடலில் தேங்கியுள்ள தேவையில்லாத பித்தம் வெளியேறிவிடும். கசப்பு-துவர்ப்புச் சுவை கொண்ட உணவு வகைகளைச் சாப்பிடுவதால், பித்த சீற்றத்தைக் குறைக்கலாம். வாயுவைக் குடல் பகுதியில் அதிகப்படுத்தும் என்பதால் அவற்றை மிதமாகத்தான் பயன்படுத்த வேண்டும்.

தான்வந்திரம் எனும் தைலத்தை வெது வெதுப்பாக உடலெங்கும் தேய்த்துக் குளிப்பதால், உடல் குத்து வலியை போக்கிக் கொள்ளலாம். கடுக்காயைத் தண்ணீரில் கொதிக்க விட்டு, அதை உடலெங்கும் ஊற்றிக் குளித்தால் வலிநிவாரணியாகச் செயல்படும்.

# சிகை அலங்கரிப்பு நிலையங்களில் தொழில் விபத்தால் எயிட்ஸ் அபாயம்

## சுகாதார பரிசோதகர் பிரேம்குமார்

(குருநகர்)

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் தொழில் செய்கையில் ஏற்படக்கூடிய விபத்துக்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வகையில் எச்.ஐ.வி. தொற்றால் எயிட்ஸ் நோய் பரவும் நிலைமைகள் நூறுவீதம் அமைந்துள்ளது என நல்லூர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரேம்குமார் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். சிகை ஒப்பனையார் சங்க மருத்துவத்துறை பீட மாணவர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சுகாதாரக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மருத்துவத்துறை இறுதியாண்டு (2012) மாணவி செல்வி வி.அபிரா தன்னுடைய குழுவினருடன் யாழ். நாச்சிமார் கோவில் கல்யாண மண்டபத்தில் கருத்தரங்கையும், பரிசோதனைகளையும் நடத்தினார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பொதுச் சுகாதாரத்தைப் பேணுவதற்கு முக்கியமாக சிகை ஒப்பனை நிலையங்களில் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் புதிதாகப் பாதி சவர அலகைப் பாவிக்க வற்புறுத்தப்படுகிறது.


எயிட்ஸ் நோய்க்கு உலகளாவிய மட்டில் இன்னமும் மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை. எயிட்ஸ் மட்டுமல்லாமல் ஹெப்படைட்டிஸ் B.A என்னும் ஈரல் அழற்சி நோய்கூட அதிவேகமாக தொற்றக்கூடியது. விரல் மற்றும் பாகங்களில் சிறு வெட்டுக்காயம் ஏற்பட்டால் அதனூடாக நுண்ணிய வைரஸ் ஊடுருவக்கூடும்.

அதனிலிருந்து ஈரல் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன என்றார்.

மருத்துவபீட குடும்ப மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி தினேஷ் குஞ்ஞே உரையாற்றுகையில்,

எயிட்ஸ் போலவே ஹெப்படைட்டிஸ் B.A நோய்களும் ஒரே மாதிரி இரத்தத்தின் ஊடாகப் பரவக்கூடிய நோய்கள். ஹெப்படைட்டிஸ் நோக்குத் தடுப்பூசி உண்டு.

எனினும் எளிதில் பெறக்கூடியதல்ல. ஒரு தடவை போட்டுக் கொள்ள ஆயிரத்து நாநூறு ரூபா வரை செலவாகும். தொடர்ந்து மூன்று தடவைகள் போட்டுக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத் தவிசாளர் அ.அல்பேட் நன்றியுரை பகர்ந்தார். (68)




யாழ். அராலி வீதியில் அமைந்துள்ள அல் அஸ்ஹார் பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது தலைவர் எம்.ஆர்.நிலாம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (105)

# முரசின் இன்றைய பலன்

(12.12.2012 – புதன்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி. நட்சத்திரம் அனுஷம் முன்னிரவு 8.39 வரை. திதி சதுர்த்தி மாலை 5.16 வரை. இராகுகாலம் 12.20 - 1.50 வரை. சுபநேரம் 4.50 - 6.20 வரை. அமிர்தசித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அறப்பணி ஈடுபாடு, அரசு உதவி அனுகூலம், தொழில் இடையூறு விலகும், கூடுதல் இலாபம் கிடைக்கும், நட்பு பாராட்டு, உடல்நல பலம், குடும்பத்தினரிடம் பாசம், ஓய்வு. |
| ரிஷபம் | நேர்மையால் நன்மை, தொழில் சிறக்கும், பணவரவில் திருப்தி, பாராட்டு கிடைக்கும். கடும் உழைப்பு, குடும்பத்திடமிருந்து ஆதரவு, போக்குவரத்தில் கவனம், மருத்துவ பரிசோதனை. |
| மிதுனம் | எண்ணத்திலும், செயலிலும் மாறுபாடு, நட்பின் ஆலோசனை, நம்பிக்கை வளரும, தொழில் அனுகூல நிலையை பயன்படுத்துக, வாகன பயணத்தில் கவனம், பரிசுகள் வரும் நாள். |
| கடகம் | நீதி, நேர்மைக்கு முக்கியத்துவம், நண்பர், உறவினர் ஆதரவு, தொழில் புது பரிமாணம், வரவும், நன்மையும் கூடும். வீட்டுப் பொருள் வாங்குவீர்கள், வாழ்க்கைத் துணையின் அன்பு. |
| சிம்மம் | தேவையற்ற சஞ்சலம், சிந்தித்து செயற்பட துன்பம் அகலும். அதிக உழைப்பு, சிக்கனம் தேவை, உடல் நலத்திற்கு உணவில் கவனம், தெய்வ வழிபாடு, எதிர்காலத் திட்டமிடல். |
| கன்னி | புத்தாக்க உணர்வு, திறமை புகழப்படும், தொழிலில் கூடுதல் மூலதனம், பணவரவு, வீட்டுப் பொருட்கள் வாஙகுவீர்களா, உத்வேகமும், செயல்திறனும், பிள்ளைகளால் பெருமை. |
| துலாம் | முன்னர் செய்ததுக்கு நற்பலன், தொழில் அபிவிருத்தி, ஆதாய வரவு, வீட்டுப் பொருள் வாங்குவீர்கள், விருந்து உபசரிப்பு, அரசு வழியில் உதவி, வெளியூரிலிருந்து சுபசெய்தி. |
| விருச்சிகம் | கூடுதல் வளம் பெற அனுகூலம், உறவினர் நண்பரிடம் நல்மதிப்பு, தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவு, மங்கல நிகழ்ச்சி திட்டம். குடும்பத்தில் ஒற்றுமை. கீர்த்தி ஓங்கும். |
| தனுசு | தொட்ட காரியம் வெற்றி. தொழிலில் உதவி கிடைக்கும், வேலைப்பளு, வரவை விட செலவு, உறவினர்களால் குழப்பம், பொறுமை எதிர்ப்பைத் தோற்கடிக்கும், உடல்நலம் சீர்பெறும். |
| மகரம் | நண்பர், உறவினர்களுக்காக செயற்படுவீர்கள், மதிப்பு, மரியாதை அதிகரிக்கும், தொழிலில் சாதனை, புதிய பணி திட்டங்கள், கொடுத்த பணம் திரும்பும், உற்சாகம், திறமை. |
| கும்பம் | பணத்தேவை அதிகரிக்கும், அவசரப்பட்டு பேசி அவதிப்பட நேரிடலாம், ஆசையை குறையுங்கள், தொழில் சராசரி, பிறர் பொருளை பொறுப்பேற்க வேண்டாம், மருத்துவ சிகிச்சை. |
| மீனம் | புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம், பகை விலகும், தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி திட்டம், சலுகைப் பயன் வரும், குடும்பத்துடன் உல்லாசம். |

# ஆன்மீக எழுச்சி விழா

(அச்சுவேலி)

இந்து சமய மறுமலர்ச்சிக்கு வாழ்வை அர்ப்பணித்த சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினமாகிய எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 12 இல் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனனதின ஆண்டு விழாவும் இந்து சமய எழுச்சி ஊர்வலமும் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் தலைவர் சிவசிறி சோ.இ.பிரணதார் திகரக்குருக்கள் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வலி - கிழக்கு பிரதேச சபைக் கிளைகள் நடத்திய இந்நிகழ்வில் ஊர்வலம் பிற்பகல் 1.00 மணியளவில் புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி விழா மண்டபத்தினை நோக்கி சென்றது.

இவ் விழாவில் பேராசிரியர் தி.வேல்நம்பியின் 'மதமாற்றம் தேவைதானா?' எனும் கருத்துரை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (எம்.ஆர்)

# செயற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களின் கைவிரலடையாளம், புகைப்படம், தேசிய அடையாள அட்டையின் விம்பம் எடுக்கும் செயற்பாடுகள் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த 3 ஆம் திகதி தொடககம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாபநிதி பாதுகாப்பிற்கு கைவிரலடையாளம் மேலதிக பாதுகாப்பாக அமையுமாதலால், இதுவரை கைவிரலடையாளத் திட்டத்தில் இணைநது கைவிரலடையாளம் வழங்காதவர்கள் பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ள முடியும்.

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் தாம் கைவிரலடையாளத் திட்டத்தில் ஏற்கனவே இணைந்துள்ளார்களா என்பதனை WWW.E.P.F.Gov.lk என்ற இணையத்தில் பிரவேசித்து தமது அடையாள அட்டை இலககத்தினை பதிவு செய்வதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

# வருடாந்த நற்கருணை வழிபாடு

(அச்சுவேலி)


வசாவிளான் உயர் பாது காப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் ஒட்டகப்புலம் அமல உற்சவ மாதா ஆலய வருடாந்த மார்கழி மாத பெரு விழா இடம்பெற்றுள்ளது.

முதல் நாள் சிறுவர் வழிபாடும் இரண்டாம் நாள் இளைஞர், யுவதிகள் வழிபாடும் அதனைத் தொடர்ந்து பெற்றோர் வழிபாடு, பொது வழிபாட்டுடன் நேற்று முன்தினம் நிறைவுற்றது.

இந் நற்கருணை வழிபாட்டில் அச்சுவேலி பங்குத்தந்தை ஜி.ஜெ.அன்ரனிபால் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(எம்.ஆர்)

# பரமர் சங்கமம்



"முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுறே" ண்டு சொல்லுவினம். அப்புடித்தான் இப்பத்தேப் புதுக்கவிதைகள்.

படிமம், பின் நவீனத்துவம் இப்புடி ஏதேதோவெல்லாம் புசத்திக் கொண்டு எழுதிக் குவிக்கினம். அறுப்பு ஒண்டுமா விளங்குதில்லை.

மஜீத் கவிதைகள் எண்ட மகுடத்தில் 200 பக்கங்களைக் கொண்ட அழகிய நூலொண்டு தபாலில் வந்து சேர்ந்தது. தமிழகப் பதிப்பு அங்க 150 ரூபா. இலங்கை விலை 400 ரூபா.

முன்னைத் தொடர்பெதுவும் இல்லாமல் அனுப்பப்பட்டுள்ளது. உங்களால் முடிந்தால் அக்கரைப்பற்று மக்கள் வங்கி குறிப்பிட்ட கணக்கிலக்கத்துக்கு பணத்தை அனுப்பும்படி சிறிய குறிப்பொன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

இல்லை எண்டாலும் 4 இலட்சம் ரூபா செலவழிச்சு தொகுதியைப் போட்டு இவ்விதம் அனுப்பவும் துணிச்சல் ஒண்டு வேணுந்தான். அதுமட்டுமல்ல, அக்கரைப்பற்றை வாழ்விடமாகக் கொண்ட கவிஞர் மஜீத் தமிழ்ப் பேரினவாதத்தின் அச்சுறுத்தலால் தற்பொழுது கொழும்பில் பதுங்கி வாழ்கின்றார் என்றும் -

தமிழ்ப் பேரினவாதமும் சிங்களப் பேரினவாதத்திற்கு நிகரானது தான் என்பது நூலில் அவரால் தெரிவிக்கப்பட்டுள்ள துணிவுகள் தான்.

'இன்றுதான் உன் ஓவியம் வந்து சேர்ந்தது, வார்த்தைக்கு அப்பால் கடந்து செல்லும் ஒரு புள்ளியைத் தேர்ந்தறிந்திருக்கிறாய், நான்மௌனத்தைச் சேர்த்து கொண்டேன். இனி நாம் பேசிக் கொள்ளலாம்'.

நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் ஒன்றே மேலே தரப்பட்டுள்ளது. ஏதாவது விளங்குகிறதா? நூலை வாசித்துக் கொண்டிருக்கையில் 'சக்தி" பண்பலை வானொலியில் நடைபெற்று வரும் 'வாசியோசி' என்னும் போட்டி நிகழ்ச்சியே நினைவில் நிழலாடியது.

இரண்டு அறிவியலாளர் ஒரு நேயர். இருவரும் ஒருவருடன் உரையாடுவர். அதற்கு தாமதம் இல்லாமல் பதிலளிக்க வேண்டும். கேள்விகளுக்குச் சம்பந்தம் இல்லாத விடைகளையே வழங்க வேண்டும். ஒரு நிமிடம் உரையாடி விட்டால் 2500 ரூபா பரிசு.

உரையாடல் இப்படித்தான் அமையும் 'உங்களுக்கு என்ன பிடிக்கும்? வானத்தில் இருந்து மழை கொட்டுது. மழை நிலத்தில் இருந்தா கொட்டும்? வெய்யில் மஞ்சள் நிறம். மஞ்சள் நிறம் பிடிக்குமா? வாழை காய்த்திருக்கு. வாழைப்பழம் நிறையச் சாப்பிடுவீங்களா?

சகதி நிகழ்ச்சிகளைக்கேட்பேன். 'சக்தி' வானொலி சமீபத்தில் கொண்டாடிய நிகழ்வென்ன? அம்மா குசினியுள் சமைக்கிறா. இவ்விதம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அந்த உரையாடல் அமைந்திருக்கும்.

மேற்சொன்ன கவிதையையும், இவ்வுரையாடலையும் வாசித்துப் பாருங்கள். இரண்டுக்கும் ஒற்றுமை இருக்கல்லவா?

புதிய - வசன கவிதைகள் என்று இத்தகைய படைப்புகளே இலக்கியச் சந்தைகளில் மலிந்து காணப்படுகின்றன. இவற்றில் இருந்து வாசகன் எதனைக் கற்றுக் கொள்வது?

காலக் கண்ணாடியான இலக்கியமூடாக அடுத்த தலைமுறைக்கு என்னத்தை விட்டுச் செல்லப் போறம்? தற்கால இலக்கியமெண்டால் மலினமாக இருக்க வேணுமா?

வாசிப்போர் விளங்கிக்கொள்ளக்கூடிய தரமான இலக்கியப் படைப்புக்களைப் படைக்கும் படைப்பாளிகள் தான் நிண்டு நிலைப்பினம்... இல்லையே நான் சொல்றே...

தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக**

(விபத்து, பாதுகாப்பு, சிக்கனமாக, மதில், குளோரின், மண்ணெய், மற்றவர்களுக்கு)

1) நீரின் மேல் .................................... இட்டால் மிதக்கும்

2) நீரை நாம் .................................... பயன்படுத்தவேண்டும்.

3) விளையாடும்போது சில வேளைகளில் .................................... ஏற்படலாம்.

4) கிணற்றைச் சுற்றி .................................... அமைப்பதால் பாதுகாப்பு கிடைக்கும்.

5) விபத்துக்கள் ஏற்படும்போது .................................... உதவி செய்தல் வேண்டும்.

6) நீரைச் சுத்திகரிப்பதற்கு .................................... பயன்படுத்தப்படும்.

7) மின்சாரத்தை .................................... உடன் பயன்படுத்த வேண்டும்.

**ஆங்கிலத்தில் தருக**

1) கழுவுதல் : ....................

2) கவனமாக : ....................

3) நீர்வீழ்ச்சி : ....................

4) விபத்து : ....................

5) கலத்தல் : ....................

**பின்வருவனவற்றிற்கு உதாரணங்கள் இரண்டு தருக**

1) கிழங்கு வகைகள் 1. .................... 2. ....................

2) பழவகைகள் 1. .................... 2. ....................

3) கீரை வகைகள் 1. .................... 2. ....................

4) மூலிகை வகைகள் 1. .................... 2. ....................



**விடை தருக**

1) சுத்தமான நீரின் இயல்புகள் மூன்று தருக.

....................................

2) பாடசாலையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மூன்று தருக.

....................................

3) உங்கள் பாடசாலைக்கு நீர் எவ்வாறு கிடைக்கின்றது?

....................................

4) பாதையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் எவை?

....................................

5) அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்கள் எவை?

....................................

6) நுளம்புகளை ஒழிக்கக்கூடிய வழிமுறைகள் இரண்டு தருக.

....................................

7) முதலுதவிப் பெட்டிக்குள் காணப்படும் பொருட்கள் மூன்று தருக.

....................................

8) நீரின் மூவகை நிலங்களும் எவை?

....................................

9) பிராணிகளால் ஏற்படக்கூடிய விபத்து இரண்டு தருக.

....................................

### தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 1) அயடின் குறைபாடு | சுதந்திர தினம் |
| 2) உயிர்ச்சத்து A | தவிடு நீக்காத அரிசி |
| 3) தேசிய விழா | முஹந்தரம் |
| 4) முஸ்லிம் புத்தாண்டு | கண்டக்கழலை |
| 5) விற்றமின் B | மாலைக்கண் |

### சரியான விடையின் கீழ் கீறிடுக.

1) சூழலிற்கு முற்றிலும் தீங்கு ஏற்படுத்தாத போக்குவரத்துச் சாதனம் எது?
 1) ஈருருளி 2) பேருந்து 3) புகையிரதம்

2) 'நங்கூரம்' பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் எது?
 1) கார் 2) விமானம் 3) கப்பல்

3) வீட்டினுள் வளர்க்கப்படும் தாவரம்
 1) பாம்ஸ் வகை 2) பன்னத்தாவரம் 3) இரண்டும் சரி

4) அயல்நாட்டிற்குப் பயணம் செய்யக்கூடிய வாகனம்
 1) புகையிரதம் 2) விமானம் 3) கப்பல்

5) சாடிகளின் அடியில் இடக்கூடிய பொருள்
 1) கருங்கல் 2) செங்கல்துண்டு 3) மணல்மண்

### பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரி (√) பிழை (x) இடுக.

1. சமநிலையைப் பேணியவாறு நடக்கக்கூடாது. ( )
2. யுனிசெவ் மாணவர்களுக்கு உதவும் நிறுவனமாகும். ( )
3. முகபாவம் மூலம் கருத்துக்களை வெளியிட முடியாது. ( )
4. இணையம் மூலம் தகவல்களை அறிய முடியாது. ( )
5. எமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் ( )









### பின்வரும் நிகழ்வுகள் தொடர்பான உங்கள் விருப்பத்தை எழுதுங்கள்.

(விருப்பம் / விருப்பம் இல்லை என எழுதவும்)

1. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றல்
.......................................................................
2. நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுதல்
.......................................................................
3. அசுத்தமான ஆடைகள் அணிதல்
.......................................................................
4. பல நாட்கள் குளிக்காது இருத்தல்
.......................................................................
5. இனிப்பு சுவையுடைய பண்டங்களைச் சாப்பிடல்
.......................................................................

### பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுங்கள்.


(....................)

(....................)

(....................)

(....................)

(....................)

(....................)

(....................)

### அட்டவணையைப் பூர்த்தி செய்க

(ஆலமரம், வேப்பமரம், கத்தரிச்செடி, மிளகாய்ச்செடி, தேக்குமரம், கமுகுமரம், முக்குத்திப்பூண்டு, குப்பைமேனி, தொட்டாச்சுருங்கி, பூசனி, பாகல், கொய்யா, பீர்க்கு, பனைமரம்)

| மரங்கள் | செடித்தாவரங்கள் | கொடித் தாவரங்கள் |
|---|---|---|
| | | |

# அடுத்த பிரதமர் ராகுல்காந்தி; காங்கிரஸ் எம்.பி கருத்து



இந்தியாவின் அடுத்த பிரதமராக ராகுல்காந்தி வருவார் என காங்கிரஸ் கட்சியின் எம்.பியான பி.சி.சாக்கோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற லோக்சபா தேர்தலை எதிர்கொள்ள காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க ஆகிய கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காங்கிரஸ் கட்சியின் பிரசார ஒருங்கிணைப்பாளர் குழுத் தலைவராக ராகுல் காந்தியை கட்சி நியமித்திருந்தது.

இது தொடர்பாக காங்கிரஸ் எம்.பி.பி.சி. சாக்கோ கூறுகையில், எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இடம்பெறும் நாடாளுமன்ற லோக்சபா தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி 3ஆவது முறையாக ஆட்சியைப் பிடிக்கும்.

பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவுடன் ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படுவார்.

அதற்காகவே தற்போது காங்கிரஸ் கட்சியின் பிரசார ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ராகுல் நியமிக்கப்பட்டார் என அவர் தெரிவித்தார்.



டில்லியில் நேற்று முன்தினம் நடந்த, 47ஆவது எல்லைப் பாதுகாப்பு படை தின விழாவில், சிறப்பாக பணியாற்றிய மிசோரம் படைப் பிரிவுக்கு 'மகா ராணா' சிறப்பு விருதை மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே வழங்கினார்.

# ஆதீனத்தினுள் மீண்டும் நித்தியானந்தா நுழைவதை தடுக்கவே தம்பிரான்

மதுரை ஆதீன மடத்துக்குள் நித்தியானந்தா மீண்டும் நுழைவதைத் தடுக்கவே புதிதாக தம்பிரான் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனமாக பாலியல் புகாரில் சிக்கிய நித்தியானந்தா கடந்த ஏப்ரலில் நியமிக்கப்பட்டதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் நடந்தன.

தன்னிடம் இருந்து இளைய ஆதீனப் பதவி பறிக்கப்பட்டாலும், அந்த இடத்திற்கு தனது நெருங்கிய சீடரான சொருபனாந்தாவை நியமிக்கும்படி ஆதீன அருணகிரிநாதரிடம் ஏற்கனவே நித்தியானந்தா வலியுறுத்தி வந்தார். அதை ஆதீனம் ஏற்கவில்லை. நித்தியானந்தாவோ அவரது சீடர்களோ எந்த ரூபத்திலும் ஆதீன மடத்தில் மீண்டும் நுழைய அனுமதிக்க கூடாது என்பதில் ஆதீனம் உறுதியாக உள்ளார். இதையடுத்து அவரது முயற்சியைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்.


## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : S. பிரகாஸ் றோச்

முகவரி: பள்ளிமுனை, மன்னார்.

அகவை 5 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# குஜராத் சட்டமன்றத் தேர்தல் பிரசாரம் நேற்று நிறைவு

குஜராத் மாநிலத்தில் முதற்கட்டமாக 87 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனால், இந்தத் தொகுதிகளில் உச்சக் கட்ட பிரசாரம் நடந்து வருகிறது.

ஆளும் பாரதிய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் போட்டி போட்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, பதன் மாவட்டம் சித்பூர் மற்றும் கேதா மாவட்டம் டகோர் ஆகிய இரு இடங்களில் நடைபெறும் பிரசாரத்தில் இன்று கலந்து கொள்கிறார்.

முதற்கட்ட பிரசாரத்தின் இறுதி நாளான நேற்று முதல்வர் நரேந்திர மோடி, ஒரே நேரத்தில் 53 இடங்களில் வீடியோ கான்பிரன்சிங் மூலம் பேசியுள்ளார்.

இது தவிர, 6 இடங்களில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டுள்ளார்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

**2013 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் சேவை ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள் ஒப்பந்தகாரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 2013.3.31 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருட்கள்**

1) காகிதாதிகள், எழுதுபொருட்கள்
2) அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
3) மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்.
4) சித்த மருத்துவ மருந்துகள்
5) கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
6) பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோல்பொருட்கள்
7) கட்டிடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள்) முதலியன
8) தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன.
9) கற்கள், மணல்கள்
10) நீர்வழங்கு பொருட்கள், பி.வி.சி. குழாய்கள் முதலியன.
11) வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
12) மின்சார இயந்திரப் பொருட்கள், மின் கருவிகள்
13) விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14) எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15) இரும்புப் பொருட்கள்
16) பனைமரங்கள், சலாகைகள்
17) நூலகங்களுக்குரிய நூல்கள்
18) வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19) தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்.
20) தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21) சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்.
22) கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்களிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.

**சேவைகள்**

1) அச்சிடுதல்
2) ரியூப் ஒட்டுதல்
3) ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
4) ஏற்றியிறக்கும் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
5) சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்டர் வாடகைக்கு விடல்
6) மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
7) மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல் ,
8) றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
9) வாகனங்கள் சேவீஸ் செய்தல்.
10) போட்டோபிரதி இயந்திரம், சேவீஸ் செய்தல்.

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள் சேவைகள் 2013' எனக் குறிப்பிட்டு பதிவு தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

'வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள், முதல்வர், மாநகர சபை யாழ்ப்பாணம்" என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ். மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000/= (வற்வரி நீங்கலாக) பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை "ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்" என்ற பெயரிற்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாக வேலைநாட்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் - சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் - சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

திருமதி யோ.பற்குணராசா
மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

(c/2215)

# அல்கொய்தா வசம் பிணைக்கைதிகள் விடுவிக்க பிரெஞ்சு அரசிடம் கோரிக்கை



அல்கொய்தாவின் பிடியில் இருக்கும் பிரெஞ்சு நபர்கள் ஆறு பேரையும்விடுவிக்க உடனடியாக அரசு முயற்சிக்க வேண்டும் என அவர்களின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரேவா என்ற பிரெஞ்சு அணு சக்தி மையத்தின் பணியாட்கள் நால்வரை, நைஜரில் வைத்து கடந்த 2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடத்தி சென்றனர்.


மேலும் கடந்தாண்டு நவம்பர் மாதமும் பிரெஞ்சு நபர்கள் கடத்தப்பட்டனர்.

அல்கொய்தாவின் பிடியில் இருக்கும் இவர்களை விடுவிக்க, அரசு உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று குடும்பத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து கடத்தப்பட்டவர்களில் ஒருவரின் உறவினர் கூறுகையில், எனது உறவினர் கடத்தப்பட்டு 27 மாதங்கள் ஆகி விட்டது. இதுவரையில் தெளிவான தகவல்கள் ஏதும் இல்லை என்று மனவருத்தத்துடன் தெரிவித்தார்.


மற்றொருவர் கூறுகையில், பிணையக் கைதிகளை விடுவிக்க அரசு இன்னும் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றார்.

# அமெரிக்காவில் விழுந்த விண்கல் பதிவு செய்தது நாசாவின் கமரா



நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் வானில் இருந்து பாரிய கல் ஒன்று விழுந்துள்ளது. நாசா கண்காணித்த பாரிய கமராவில் இது பதிவாகியுள்ளது. இந்தக் கல் விழுந்த செய்தி மக்களைப்பெரிதும் உலுக்கியுள்ளது. எதிர்வரும் 21 திகதி, உலகம் அழியும் என்ற நிலையில், இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் பூமியை நோக்கி இந்தக் கல் விழும் என்ற நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கல் பூமியை நோக்கி விழும் பொழுது எரிந்த நிலையில் விழுந்துள்ளதுள்ளமையும் பலர் பார்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நோபல் பரிசளிப்பு விழா பிரிட்டன் பிரதமர் பங்கேற்கவில்லை



சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோமில் 2012ஆம் ஆண்டில் நோபல் பரிசு வென்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடந்தது.

இந்த விழாவில் 2012ஆம் ஆண்டில் மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம், இயற்பியல் மற்றும் இரசாயனம் ஆகிய துறைகளில் சிறப்பு வாய்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விருதை சுவீடன் மன்னர் 16ஆம் கார்ல் குஸ்டப் வழங்கினார்.

மேலும் நோர்வே தலைநகர் ஒஸ்லோ நகரில் நடைபெற்ற விழாவில் இந்த ஆண்டுக்கான அமைதி நோபல் பரிசு ஐரோப்பிய யூனியனுக்கு வழங்கப்பட்டது.


சிட்டி ஹோலில் நடைபெற்ற விழாவில் ஆஸ்திரியா பிரதமர் வெர்னர் பேமேன், போலந்து பிரதமர் டொனால்டு டஸ்க், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தனது உறுப்பு நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் ஐரோப்பிய யூனியன் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக நோபல் குழு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்கும், பிரிட்டனுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு வரும் நிலையில் இவ்விழாவில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# மாலிக்கின் பிரதமர் இராணுவத்தால் கைது



மாலி நாட்டின் பிரதமர் சீக் மொபிடோ டியாரா கைது செய்யப்பட்டுள்ளார். சட்டவிரோதமான முறையில் பிரான்ஸிற்கு பயணம் செய்ய முயற்சித்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் நோக்கில் மேற் கொள்ளப்படவுள்ள பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்க பிரதமர் முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரதமருக்கும் இராணுவச் சூழ்ச்சியை முன்னெடுத்த படையினருக்கும் இடையிலான முரண்பாடு தொடர்ந்தும் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ரீதியாக மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதமரை ஆட்சியிலிருந்து வெளியேற்ற படையினர் முயற்சி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டின் பிரதமரை படையினர் கைது செய்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வெளிநாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதமர் இவ்வாறு பிரான்ஸிற்கு தப்பிச் செல்ல முயற்சித்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# தலிபான்களால் கடத்தப்பட்ட அமெரிக்க டாக்டர் மீட்பு



அமெரிக்க பிரஜையான டாக்டர் பிலிப் ஜோசப் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வசித்து வந்தவர்.

இவரை சரோபி என்ற இடத்திலிருந்து கடந்த 5ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகள் கடத்திச்சென்று விட்டனர்.

அவருக்கு உயிராபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்ததையடுத்து டாக்டர் பிலிப் ஜோசப்பை மீட்க நடவடிக்கை எடுக்கும்படி நேட்டோ படைகளின் தளபதி ஜெனரல் ஜான் ஆலன் உத்தரவிட்டார்.

அதைத் தொடர்ந்து நேட்டோ படைகள் நேற்று காலையில், பிலிப் ஜோசப்பை பத்திரமாக மீட்டுவிட்டன.

# குர்பானி தோல்களை விற்று நிதி திரட்டிய தீவிரவாதிகள்



பாகிஸ்தானில் இயங்கிவரும் தீவிரவாத அமைப்பு களுக்கு நிதியுதவி செய்ய வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளதையடுத்து அங்கு புதிய முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, முஸ்லிம்கள் கொண்டாடும் பக்ரீத் பண்டிகை காலத்தில் குர்பானி கொடுக்கப்படும் ஆடு, மாடுகளின் தோல்களை மக்களிடமிருந்து பெற்று, அவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தை தீவிரவாத அமைப்புகள் செலவு செய்கின்றன.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணஅரசு, கடந்த ஒக்ரோபர் மாதம தீவிரவாதிகளுக்கு குர்பானி தோல்களை தரக்கூடாது என்று தடை விதித்திருந்தது. இதற்கிடையே ஜமாத்- உட்- தாவா, ஜெயஷ்-இ-முஹம் மத் போன்ற தீவிரவாத அமைப்புகள் அப்பகுதி மக்களிடமிருந்து 92ஆயிரத்து800 தோல்களை சேகரித் துள்ளன. இவற்றை 78 கோடியே 2 இலட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்றுள்ளனர் என பாகிஸ்தான் உளவுத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

# பனிப்பொழிவின் எதிரொலி; ஜேர்மனியில் விமானசேவை இரத்து



ஜேர்மனியில் பனிப்பொழிவு அதிகமாக இருந்த காரணத்தினால் 150 விமானங்களின் சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஜேர்மனியின் மிகப்பெரிய விமான நிலையமான ப்ராங்பேர்ட் விமான நிலையம் ஐரோப்பாவின் மூன்றாவது பரபரப்பான விமானநிலையம் ஆகும்.

இங்கு பனிப்பொழிவு அதிகமாக இருந்த காரணத்தினால் 150 விமானங்களின் சேவை இரத்துச் செய்யப்பட்டன.

மேலும் தலைநகரான பெர்லின் விமானநிலையத்தில் விமானங்கள் எதுவும் நிறுத்தப்படவில்லை. 20 நிமிடங்கள் தாமதமாகவே புறப்பட்டன.

அத்துடன் தரைப்பகுதியில் முக்கால் அடி உயரத்திற்கு பனி படர்ந்துள்ளதால், வாகனங்களில் செல்பவர்கள் கவனமுடன் இருக்க வேண்டும் என அறிவுறுததப்பட்டது.

# உளவு பார்த்த கழுகு சூடானில் சிறைபிடிப்பு



இஸ்ரேல் நாட்டுக்கு உளவு பார்த்ததாக கருதப்படும் கழுகு ஒன்று சூடானில் சிறைபிடிக்கப்பட்டு உள்ளது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் பகைமை நிலவி வருகிறது. இந்நிலையில் பலஸ்தீனத்துக்கு, சூடான் ஆயுதங்களை விநியோகம் செய்வதாக இஸ்ரேல் குற்றம் சுமத்தி வருகிறது.

இதற்கிடையே சூடான் நாட்டின் டார்பர் நகரில் பிணம் தின்னிக் கழுகு பறந்தது. இதை அந்நாட்டு பாதுகாப்பு படையினர் பிடித்து வைத்துள்ளனர். இந்தக் கழுகின் கால்களில் சூரிய சக்தியால் இயங்கும் சாதனமும், ஜி.பி.எஸ் சாதனம் ஒன்றும் கட்டப்பட்டு உள்ளது. இந்த கழுகு மூலம் இஸ்ரேல் உளவு பார்த்துள்ளதாக சூடான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# யாழ். பல்கலை விவகாரம் கனேடிய எம்.பி. கண்டனம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளதுடன், சர்வதேச சமூகம் இலங்கையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என மேற்படி கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வுட்வேர்த் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது தொடரும் தாக்குதல்களை அடுத்து இலங்கை மீதான கண்டனங்களும் கனேடிய மண்ணில் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. இலங்கையில் மனித உரிமைகள் சீர்கேட்டுச் செல்வது மிகுந்த கவலையளிப்பதாக கனடாவின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பரித்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான பற்றிக் பிரவுன் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து கிச்னர் மத்தி ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன்வுட்வேர்த்தும் தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ளார். மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாணவர்கள் காயப்படுத்தப்பட்டமை, தடுத்து வைக்கப்பட்டமை குறித்து தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிடுவதாக ஸ்டீவன் வுட்வேர்த் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றபோது அது குறித்து குரல் எழுப்புவது ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரின் கடமை என்றார்.

## ஆஸி. வெளிவிவகார...

நாடொன்றுக்கு விஜயம் செய்யும் முதல் சந்தர்ப்பமாக கொழும்பு விஜயம் கருதப்படுகின்றது. கடந்த 12 மாதங்களில் இலங்கை அதிகாரிகளினால் 68 சட்டவிரோத ஆட்கடத்தல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டு உள்ளதாகவும் இதில் 2900 கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைப்...

இலங்கை உள்ளிட்ட பிராந்திய வலய நாடுகளுக்கு இவ்வாறு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் அன்டனி குறிப்பிட்டுள்ளார். பயிற்சிக்கான தேவைகளின் அடிப்படையில் பல மாநிலங்களில் பயிற்சி நடாத்தப்படுகின்றது. தேசிய நலன்களின் அடிப்படையில் அரசாங்கம் கொள்கைகளை வகுத்து அமுல்படுத்தி வருவதாகவும் இதன் அடிப்படையிலேயே இலங்கைப் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தொழில்...

கிழமை விடுமுறையாகையால் கடைகளை மூடுமாறு பணித்துள்ளனர். எனினும் வர்த்தகர்கள் சுப்பர் மார்க்கட்டுக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்துள்ள நிலையில் தாம் தமது கடைகளை மூடுவதனால் தமக்கு வாடிக்கையாளர் குறைவடைந்து செல்வதாகவும் எனவே அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும் நிலையில் தாமும் மூடுவதற்குத் தயார் என தெரிவித்துள்ளனர்.

இந் நிலையிலேயே அவர்கள் தாம் தொழில் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கத் தயாரென்றும் எனினும் அதனை பல்தேசிய கம்பனிகளும் பின்பற்றுமாயின் தாமும் அதனை பின்பற்ற பின்நிற்கபோவதில்லை என தெரிவித்துள்ளதுடன் தொழில் திணைக்களம் தனித்து சிறு வியாபாரிகளின் பொருளாதாரத்தை நசுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் பாரிய வர்த்தக நிலையங்களைக கண்டுகொள்வதில்லை எனவும் குற்றம் சுமத்தினர்.(160)

## இந்தியா...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து களநிலவரங்களை ஆராய்ந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சின அபிவிருத்தி பங்களிப்பு நிர்வாக மேலதிக செயலாளர் திரு.பி.எஸ்.ராகவன், நிதி ஆலோசனை மேலதிகச் செயலாளர் பிமல் யுல்கா, கட்டடக்கலைஞர் கீர்த்திஸா, இந்திய அரசின் நகர அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதர் வி.மகாலிங்கம் ஆகியோர் இந்திய குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் 3 கட்டங்களாக முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. பயனாளிகளை தெரிவு செய்தல், பயனாளிகளுக்கு நிதிகளை விடுவித்தல், உயர்தரத்திலான வீடுகளை அமைத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன் வீடமைப்புத் திட்டத்தின் பெரும் பகுதி வேலைகளை நிறைவேற்றும் முகமாக செயற்திட்டங்களைத் துரிதப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் உதவிச்செயலாளர் கோ.வாகீசன், வடமாகாண அரச அதிபர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில்...

நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நேற்று முதல் ஸ்தமபிதமடைந்துள்ளது. இதன் காணரமாக பல வழக்குகளுக்காகவும் நீதிமன்றத்தை நாடிய பலர் நேற்று ஏமாற்றத்துடன் சென்றிருந்த நிலையில் தமது போராட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடருமென வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன புனிதநாயகம் தெரிவித்தார். பணிப் பகிஷ்கரிப்புத் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணை மற்றும் சுதந்திரமாக நீதித்துறை செயற்பட முடியாமை, பிரதம நீதியரசருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுவரும் தரம் குறைந்த வார்த்தைப் பிரயோகங்கள் என்பவற்றைக் கண்டித்து எமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் வட பகுதி சட்டத்தரணிகள் ஒன்று கூடி மதியம் 12 மணிக்கு ஆர்ப்பாட்ட மொன்றினையும் நடத்தவுள்ளனர் என்றார்.(160)

## விதிகளை...

காரணமாக இந்த வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றது. அதாவது தற்போது நாளொன்றுக்கு 8 பேர் வீதம் விபத்துக்காரணமாக இறக்கின்றனர். இதனையடுத்து மேற்படி திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்படும். அதாவது 24 மாதத்திற்குள் சாரதி ஒருவர் 24 புள்ளிகளைப் பெறுவார் எனின் 12 மாத காலத்திற்குள் குறித்த சாரதியின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும்.

மீள வாகன அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு நன்னடத்தைக் காலம் வழங்கப்பட உள்ளதோடு இக்காலத்தில் 6 புள்ளிகள் பெற்றால் நன்னடத்தைக் காலம் மேலும ஒரு வருடத்தினால் நீடிக்கப்படும். 24 மாத காலத்தினுள் 24 புள்ளிகளைவிட குறைவாகப் பெறும் சாரதி ஒருவர் அடுத்த வருடத்தில் புள்ளி எதுவும் பெறாவிட்டால் அந்தப் புள்ளிகளில் 6 குறைக்கப்படும்.

அதற்கு அடுத்த வருடத்திலும் புள்ளிகள் எதுவும் பெறாவிடின் அவரின் சகல புள்ளிகளும் நீக்கப்படும். சாரதி பயிற்சி வகுப்பு நடத்தும் ஒருவர் 24 மாதகாலத்தினுள் 12 புள்ளிகள் பெற்றால் அவரின் அனுமதிப் பத்திரம் 12 மாதங்களுக்கு இரத்துச் செய்யப்படும்.

சாரதிகள் பெறும் புள்ளிகள் பற்றிய விபரம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பொலிஸ் திணைக்களமும் நீதிமன்றமும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவிக்கவேண்டும். அவை கணனியில் உட்படுத்தப்பட்டு புள்ளிகள் கணிப்பிடப்படும். 18 புள்ளிகளை தாண்டியதும் அது குறித்து கடிதம் மூலம் சாரதிக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின்...

தற்போது பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளோரையும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு இணங்கச் செய்யமுடியும். விமர்சனங்களை முன்வைப்பதால் அரசாங்கத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

கேள்வி: 13 இற்கு அப்பாற்பட்ட தீர்வு தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது என்ன?

பதில்: அது ஜனாதிபதி தெரிவித்த கருத்து. அவர் தெரிவித்த கருத்தில் எவ்வித தவறுமில்லை. இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கேள்வி: 13 ஆவது யாப்புத் திருத்தம் தொடர்பாக ரி.என்.ஏ. அதிக அதிகாரங்களை கேட்கின்றதல்லவா?

பதில்: நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொருட்படுத்துவதில்லை. நான் ஜனாதிபதியை மதிக்கின்றேன். அவர் அதை நிறைவேற்றுவார். வட,கிழக்கு மக்களின் வாழ்வாதரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை சீர்குலைக்க முயற்சிக்கின்றது. 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது சமாதானமும் நிம்மதியுமே தேவையாக உள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் அபசகுனமாகவே பேசுகின்றது. இவர்களது செயற்பாடுகள் மக்கள் மத்தியில் மீண்டும் வன்முறையையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் 13 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள உறுப்பினர்களுடன் விசேட பேச்சுவார்தை ஒன்று கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

கேள்வி: வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை காணப்படுகின்றதா?

பதில்: எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அங்கு பிரச்சினைகள் எதுவுமில்லை. தேர்தல நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை காணப்படுகின்றது.

கேள்வி: ஆனால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தின் பின்னர் காணப்படும் சூழ்நிலைகள் சிறப்பானதாக இல்லை?

பதில்: யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் பின்னணியுடன் அவதானிக்கும் தன்மையுடன் இப்பிரச்சினை தொடர்பாகவும் அவதானிக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற பிரச்சினைகள் பல வருடங்களாக காணப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் படையினர் நிலைகொண்டிருப்பதை விரும்புகின்றது. அவர்கள அதை வைத்துகொண்டு அரசியலை முன்னெடுக்கலாம. சவப் பெட்டி விற்பனை செய்பவர் ஒருவர் எப்போது மர ணம் அடைவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்லலாம். ஆகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதை விரும்புவதில்லை. பிரச்சினைகள் மேலும் முற்றிப்போவதையே அவர்கள் விரும்புகின்றனர். காலாகாலம் புதிய பிரச்சினைகளை அவர்கள் உருவாக்கிக் கொள்கிறார்கள். ஒருசில தமிழ் பத்திரிகைகள் இதற்கு துணைபுரிகின்றன. இதுபோன்ற சூழ்நிலையில் நாம் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

கேள்வி: நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சில தமிழ் எம்.பிக்கள் நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்க முற்படுகின்றனர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: ஆம். ஒரு எம்.பி. நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது மகாவம்சத்தை தீயிட்டுக் கொளுத்த வேண்டுமென்று தெரிவித்திருந்தார். இதுபோன்று கருத்துக்கள் மீண்டும் நாட்டில் குழப்பதை ஏற்படுத்தவே வழிவகுக்கும். தென்பகுதி சிங்கள மக்கள் தமிழர்களின பிரச்சினைகள் குறித்து சிறந்த புரிந்துணர்வைக் கொண்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சிங்கள மக்கள் உளளனர். அதேபோன்று குழப்பங்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை ஏற்படுத்தும் சக்திகளும் நாட்டில் காணப்படுகின்றன.

கேள்வி: யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை தமிழ்மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருக்குமல்லவா?

பதில்: யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ஒரு தமிழ் எம்.பி.யே காரணம். மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அவர் விரும்பினால் தமது வீட்டிலேயோ அல்லது வர்த்தக நிலையத்திலோ தீபம் ஏற்றியிருக்கலாம். அதில் பல்கலைக்கழக மாணவர்களை தொடர்புபடுத்தக்கூடாது. அமைதியாகப் படிக்கும் மாணவர்களைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதே அவ் நாடாளுமன்ற உறுப்பினரின் முயற்சியாகும். அரசியல் ஆதாயத்தை பெற்றுக்கொள்வதற்காக தேவையற்ற குழப்பங்களை அவர் ஏற்படுத்தினார். அதற்கு பல்கலைக்கழக மாணவர்களை அவர் கேடயமாக பயன்படுத்தினார். பொது இடங்களில் தீபம் ஏற்றி மோதலகளை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது.

கேள்வி: இறந்தோரை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றுவது தவறா?

பதில்: தீபம் ஏற்றி மரணித்தோரை நினைவு கூருவதில் எவ்வித தவறுமில்லை. ஆனால் அதனை அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்துவது தவறு. பொது இடங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதும் தவறு. மரணமடைந்த புலிகள் தொடர்பாக அவருக்கு அனுதாபமோ ஆதங்கமோ இருந்தால் அதனை தனது வீட்டில் அல்லது வர்த்தக நிலையத்தில் விளக்கேற்றுவதில் எவ்வித தவறுமில்லை. ஆனால் பல்கலைக்கழக மாணவர்களை பலிக்கடாக்கள் ஆக்கி அரசியல் ஆதாயம் பெற்றுக்கொள்வது தவறு. ஹிட்லரை நினைவு கூர்ந்து எங்காவது தீபம் ஏற்றுவது உண்டா?

கேள்வி: தீபம் ஏற்றியமைக்காக பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தவறல்லவா?

பதில்: இது பிழையான கருத்து. தீபம் ஏற்றியதால் தான், பொலிஸார் தாக்கினார்கள் என்று சொல்ல முடியாது. ஊர்வலம் ஒன்று நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அனுமதியின்றி கூட்டம் நடத்த வேண்டாமென்ற பொலிஸாரின் அறிவுறுத்தல் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. இதனை தடுக்கச் சென்றபோதே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்களும் பொலிஸாரின் அறிவுறுத்தல்களை மீறியபோது தடுக்கப்பட்டுள்ளனர். புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட இயக்கமாகும். மக்கள் விடுதலை முன்னணி தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருந்தபோது கார்த்திகை வீரர்கள தினத்தை கொண்டாடச் சட்டம் அனுமதிக்கவில்லை. புலிகளின் அமைப்பும் அவ்வாறுதான்.

கேள்வி: யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

பதில்: அத்தகவல்களில் எவ்வித உண்மையுமில்லை. வடக்கில் சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் சிலரால் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டாலும் தற்போது பல்கலைக்கழகம் சிறப்பாக செயற்படுகின்றது. யாழ் பல்கலைக்கழகம் சர்வதேச பல்கலைக்கழக தரவரிசையில் 9306 ஆம் இடத்தில் காணப்பட்டது. தற்போது 5662 ஆம் இடத்தை அடைந்துள்ளது. தேசிய மட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 7 ஆம் இடத்தில் உள்ளது. முறையற்ற நிர்வாகம் காணப்பட்டால் பல்கலைக்கழகம் எவ்வாறு இந்நிலையை அடைந்திருக்கமுடியும்? இது நிர்வாகம் சார்ந்த பிரச்சினையல்ல. ஒருசில அரசியல்வாதிகள் பல்கலைக்கழக மாணவர்களை தமது ஆதாயத்திற்காகப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றனர்.

# கடற்றொழில் செயற்பாட்டு மையம் திறப்பு சேந்தாங்குளம் மீனவர்களுக்கு வாய்ப்பு



யாழ். கீரிமலை சேந்தாங்குளம் பகுதி கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு 14 மில்லியன் நிதியில் படகுகள் மற்றும் மீன்பிடி செயற்பாட்டு மையக் கட்டடம் ஆகியன நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட மீன்பிடி செயற்பாட்டு மையக் கட்டடத்தினை அவுஸ்ரேலியா எய்டின் அபிவிருத்தி திட்ட இணைப்பாளர் எட்வேர்ட் அர்ச்பல்ட் மற்றும் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் பிரதம அதிகாரி ரிசார்ட் டான்சியர், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் அமைப்பாளரும், வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) ஆகியோர் திறந்துவைத்தனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த அவுஸ்ரேலியா எய்டின் அபிவிருத்தி திட்ட இணைப்பாளர் எட்வேர்ட் அர்ச்பல்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாகத்தான் கடற்றொழிலாளர்களுக்கான செயற்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், கடற்றொழிலாளர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மேலும் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதுடன், உங்களது கோரிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதிநிதியிடம் தெரிவித்தால் அவர் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் அமைப்பாளர் ஏற்கனவே மாதகலில் இதேபோன்று ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது அதைவிட இன்று திறந்து வைத்துள்ள கடற்றொழிலாளர்களுக்கான கட்டடம் பல்வேறு வசதிகளுடன் அமைந்துள்ளது. இதுபோல் மீள் குடியேறிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் படிப்படியாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

அத்துடன் சுயலாப அரசியல்வாதிகள் மாதகல் பிரதேசத்தில் மீள்குடியேற்றங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறவில்லையென குற்றம் சுமத்தி சர்வதேசங்களுக்கு பிழையான தகவல்களை வழங்கி வருகின்றனர். ஆனால் இன்று இத்தகவல்கள் பிழையானவை என்பதனை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கண்கூடாக காணக்கூடியதாகவுள்ளது என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த 117 குடும்பங்களின் வாழ் வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடனும், இச்செயற்பாட்டு மையம் தினசரி மீன் விற்பனைக்கும், மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கும், இதன் ஒரு பகுதியில் மீன்பிடி படகுகள் மற்றும் இயந்திரங்கள், வலைகள் திருத்துவதற்குமாகவும் மற்றும் பொது நோக்கு மண்டபம், நூல் நிலையம், சுகாதார நிலையம், முன்பள்ளி என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வலிவடக்குப் பிரதேச செயலாளர் க.சிறிமோகனன், வலி.தென்மேற்கு பிரதேச செயலர் முரளிதரன், ஐ.ஓ.எம் பிரதான திட்டப்பணிப்பாளர் டன்ஸன், ஈ.பி.டி.பி.யின் வலி.வடக்கு பிரதேச பொறுப்பாளரும், வலி.வடக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜெயபாலசிங்கம் (அன்பு), வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் திருஞானம், வலி.தெற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன், வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் ராஜசேகரம், கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவித் திட்டப்பணிப்பாளர் மற்றும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆசியாவுக்கு அதிகரிக்கிறது பலம்

2030 ஆம் ஆண்டளவில் உலகின் அதிக வல்லமை படைத்த கண்டமாக ஆசியாக்கண்டம் திகழும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலத்தை விஞ்சுமளவுக்கு ஆசிய நாடுகள் முன்னேற்றம் காணும் என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டும் தசாப்தங்களில் அமெரிக்கப் பொருளாதாரத்தை புறந்தள்ளி சீனாவின் பொருளாதாரம் முன்னிலை பெறும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சனத்தொகையின் அளவு, உள்நாட்டு உற்பத்தி, புதிய தொழில்நுட்பங்கள், இராணுவப் பலம் என அனைத்திலும் ஆசியக் கண்டம் முதலிடம் பெறும் எனக் கூறப்படுகின்றது.

ஐரோப்பிய வலய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகள், மேற்குலக நாடுகளில் சடுதியாக வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றமை போன்றன இதில் செல்வாக்கு செலுத்தும் எனக்கூறப்படுகின்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் இந்த ஆய்வு அறிக்கை இறுதியாக 2008 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது.

# குப்பிளானில் கொள்ளை நாய்க்கு நஞ்சூட்டி கைவரிசை

(குப்பிளான்)

குப்பிளான் பிரதேசத்தில் வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள், நாய்க்கு நஞ்சு கொடுத்து கொலை செய்ததுடன், வீட்டிலிருந்தவர்களுக்கு மயக்கமருந்தை வீசி பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை வேளையில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அவ்வீட்டில் இருந்த நாய்க்கு சாப்பாட்டில் நஞ்சு கலந்து கொடுத்துள்ளனர். சிறிது நேரத்தின் பின் நாய் இறந்ததும் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களுக்கு மயக்க மருந்தை தெளித்துள்ளனர்.

வீட்டிலிருந்த அனைவரும் மயககமடைந்தததையடுத்து, அங்கிருந்த நகைகள், கையடக்கத் தொலைபேசிகள், மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மயக்கம் தெளிந்து எழுந்த போது வீட்டிருந்த பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதை தெரிந்து கொண்ட வீட்டு உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

முறைப்பாட்டில் சுமார் 10 இலட்சம் ரூபா 'பெறுமதியான பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கைதடி சரஸ்வதி முன்பள்ளி பாடசாலையின் ஆசிரியர் தின விழாவும், முன்பள்ளி மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்ற போது ஆசிரியர் ஒருவர் மாணவிக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (90)

# பெண்களுக்கு எதிரான வன்முறை; முல்லையில் விழிப்புணர்வு வாரம்

(வவுனியா)

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு வாரம் முல்லைத்தீவு பிரதேசத்தில் சிறப்பாக நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மனித உரிமைகள் இல்லத்தின் சார்பில் அனுஷ்டிக்கப்பட்ட இவ் நிகழ்வில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எவ்வாறு இடம்பெறுகின்றது, கிராமப் புறங்களில் எவ்வாறான பாதிப்புகளுக்கு பெண்கள் முகம்கொடுக்கின்றனர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் இதர வன்முறை சம்பவங்களை இனம் 'காணும் பொருட்டு செயலமர்வுகள் இடம்பெற்றதுடன் வாக்களிப்பு முறையிலான வன்முறை இனங்காணல் செயற்பாடும் இடம்பெற்றது.

இதேவேளை, இந்நிகழ்வில் பங்கு கொண்ட பெண்கள் கைகளில் வெள்ளை பட்டியணிந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம் என்று சத்தியம் செய்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பெருமளவிலான ஆண்களும் கலந்து கொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க பாடுபடுவோம் என்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (160)

# ஜப்பானியருக்கு விளக்கமறியல்

தேசிய கொடியை அவமதித்ததான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள ஜப்பானிய பிரஜையொருவரை, எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை பிரதான நீதவான் நிரோஷா பெர்ணான்டோ உத்தரவிட்டுள்ளார். தேசிய கொடியில் உள்ள சிங்கத்துக்கு பதிலாக பண்டா மிருகத்தின் புகைப்படம் பொருத்தப்பட்டிருந்த 167 தபால் முத்திரைகளுடன் மேற்படி ஜப்பானியப் பிரஜை கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# தெரிவுக்குழு அறிக்கை சுயாதீனமாக ஆராயப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை சுயாதீனமான முறையில் ஆராயப்பட உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை, சுயாதீன குழுவின் மூலம் ஆராயத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணை அறிக்கையை சுயாதீன குழுவொன்று ஆராய்ந்ததன் பின்னர், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் தமது கருத்தை வெளியிட உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தனிப்பட்ட ரீதியில் தமக்கு கவலையை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீன குழுவின் ஆய்வின் பின்னர் மிக நியாயமான தீர்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். தமது ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாது, 117 ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் அதன் பின்னரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக குரல் கொடுத்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது அவருக்கு ஆதரவாக குரல் எழுப்புவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# சடலம் தேடும் வேட்டை இடைநிறுத்தம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் 14 வருடங்களுக்கு முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானப் பயணிகளின் சடலங்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கை இது வரை பயணிக்கவில்லை. கௌதாரிமுனைக் கடற்கரையில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மேற்படி பயணிகளின் சடலங்களைத் தோண்டும் பணிகள் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சடலங்கள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இதனையடுத்து அப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். இந்நிலையில், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ஆய்வு ரீதியில் மூன்றாம் கட்டமாக இந்த சடலங்களைத் தோண்டுப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி மேற்படி விமானம் புலிகள் இயக்கத்தின் ஏவுகணைத் தாக்குதலில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதன்போது குறித்த விமானத்தில் 48 பயணிகளும் 7 விமானப் பணியாளர்களும் உட்பட 55 பேர் பயணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் சிறுமி பலி

புத்தளம் வான்வீதியில் கனரக வாகனத்தினை பாதுகாப்பற்ற முறையில் பின்பக்கமாக செலுத்திய போது அதில் மோதுண்டு 5 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. குறித்த வாகனத்தினை செலுத்திய புத்தளம் நகர சபையின் சுயேட்சைக் குழு உறுப்பினர் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் பிற்பகல் தனது வீட்டு வளாகத்தில் வைத்து வாகனத்தினை பின்னால் செலுத்தியுள்ளார். அச்சமயம் அவரின் உறவினரின் குழந்தையே வாகனத்தின் பின்னால் மோதுண்டு உயிரிழந்ததாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.